# மாலை தீப்பொறி

MALAE THEEPORI




2024 அக். 16-31 தொகுதி 23 இதழ் 6 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200




## நீதி கேட்டு நடைபயணம்: பீகார்



# பீகாரை மாற்றுவோம்
# நீதி கேட்டு நடைபயணம் – இகக மாலெ

நீதி கேட்டு நடைபயணம் பீகார் மாநிலம் நவடா மாவட்டம், கிருஷ்ணா நகர் கிராமத்தில் இருந்து அக்.16 அன்று தொடங்கியது. இகக (மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் மற்றும் அரசியல் தலைமை குழு உறுப்பினர் அமர் தலைமையில் டாக்டர் அம்பேத்கார் , ஜெயபிரகாஷ் நாராயணன், இந்திய மக்கள் முன்னணியின் மூத்த தலைவர் சுரேந்திர சிங் ஆகியோர் சிலைக்கு மரியாதை செலுத்தி நூற்றுக்கணக்கானவர்கள் நடைபயணத்தைத் தொடங்கினார்கள். இகக மாலெ சட்டமன்ற உறுப்பினர்கள் மகானத் சிங், கோபால் ரவிதாஸ், ராம்பலி சிங் யாதவ் மற்றும் மேலவை உறுப்பினர் சசியாதவ் ஆகியோருடன் பெண்களும் இளைஞர்களும் கிராமப்புறத் தொழிலாளர்களும் கலந்து கொண்டார்கள்.



நிதிஷ் - பாஜக ஆட்சியை மக்கள் நிராகரிக்க வேண்டும், பீகாரை மாற்ற வேண்டும், அம்பேத்கர் நமக்களித்த அரசியலமைப்புச் சட்டம் சாதி, மத, மொழி அடிப்படையில் பாரபட்சமின்றி அனைவரும் சமம் என்கிறது. அரசமைப்புச்சட்ட முகவுரை இந்திய மக்கள் ஒவ்வொருவருக்கும் சமூக, பொருளாதார நீதியை உத்தரவாதம் செய்கிறது. வேறுபாடுகளுக்கு முடிவு கட்டி நமது அரசமைப்பு சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை உத்தரவாதப் படுத்தும் ஒரு பீகாரை நாம் உருவாக்க வேண்டும் என தோழர் திபங்கர் தனது துவக்கவுரையில் குறிப்பிட்டார். அவர் மேலும், இன்று ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களால் நமது அரசமைப்புச் சட்டம் தாக்குதலுக்குள்ளாக்கப்படுகிறது. தலித் மக்கள் மீது பாரபட்சம் காட்டப்படுகிறது. பாஜகவினர் வெளிப்படையாகவே வெறுப்பு பேச்சு பேசி முஸ்லீம்களை மிரட்டுகிறார்கள். அதன் மூலம் சமூகத்தைப் பிளவு படுத்துகிறார்கள். இந்த நீதிக்கான நடைப் பயணம், மக்கள் விரோத மதவெறிப் பாசிச சக்திகளை அந்நியப்படுத்தி, பீகார் மக்களுக்கான ஒரு நியாயமான, சமத்துவ சமுதாயத்தைப் படைப்பதை நோக்கமாகக் கொண்டது என்று கூறினார்.



நடைபயணத்தில் வரும் இகக மாலெ பொதுச் செயலாளர் உள்ளிட்ட தோழர்களுக்கு பீகாரின் உழைக்கும் மக்களும் இளைஞர்களும் பெண்களும் உற்சாகமாக வரவேற்பு அளித்து வருகிறார்கள். பல கிராமங்களில் இரவு நேரத்திலும் காத்திருந்து வரவேற்பு அளித்து, பொதுக் கூட்டத்திலும் மக்கள் பெருமளவில் கலந்து கொள்கிறார்கள்.

மகத் மண்டலப்பகுதியில் நடைபயணத்தை தோழர் திபங்கர் தலைமையேற்று நடத்தி வருகிறார். சாகாபாத் பகுதிக்கு இகக மாலெ பீகார் மாநிலச்செயலாளர் குணால் தலைமை ஏற்கிறார். மிதிலா பகுதியில் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் திரேந்திர ஜா மற்றும் இகக மாலெ பீகார் சட்டமன்றக் குழு தலைவர் மகபூப் ஆலம் தலைமையில் நடைபெற்றது. சரன் மண்டலத்தில் தரோலி தொகுதி எம்எல்ஏ சத்யதேவ் ராம், அமர்நாத் யாதவ், நைமுதின் அன்சாரி தலைமை தாங்கினர். திற்குட் மண்டலத்தில் மத்தியக் கமிட்டி உறுப்பினரும் எம் எல் ஏவுமான வீரேந்த பிரசாத் தலைமை தாங்கினார். ஜேஎன்யூ மாணவர் சங்கத் தலைவர் தனஞ்சை மகத் பகுதியில் கலந்து கொண்டார். சிங்காத்யா (வாசிர் கஞ்ச்) வழியாகச் சென்ற நடைபயணத்தைக் கண்ட 70 வயது ரகுநாத் தாஸ் ஓடோடி வந்து இகக(மாலெ) பொதுச் செயலாளர் திபங்கரை சந்தித்தார். அவரது கைகளை பிடித்துக் கொண்டு, அவரது கிராமத்தில் அவரைப்போன்ற ஏழை தலித்துகளின் நீண்டகாலமாக இருந்து வரும் நிலப்பிரச்சனையை எடுத்துச் சொன்னார். அவரும் அவரைப் போன்றோரும் நீண்டகாலமாக வசித்து வரும் பூமிதான நிலத்தை மிராசுதார்கள் அபகரிக்க முயன்று வருவதாக கூறினார். கயா மாவட்டம் தேகரி ஒன்றியம், சிரேலி கிராமத்தில் சஞ்சய் மஞ்சி என்பவர் தன்னுடைய நிலத்தை நிலப்பிரபுத்துவ ஆதிக்கக் கொள்கையர்களிடம் இருந்து காப்பாற்றப் போராடியதில் தன்னுடைய ஒரு கையை இழந்தார். இது நாள் வரை அவருக்கு இழப்பீடு எதுவும் கொடுக்கப்படவில்லை. கட்சியின் நடைபயணம் சிரேலி கிராமத்தைக் கடந்த போது அவரும் மக்களுடன் வந்து வரவேற்றார்.



மாலை தீப்பொறி

இருவார இதழ்

*2024 அக்டோபர் 16 - 31*

*தொகுதி 23 இதழ் 6*

முதன்மை ஆசிரியர்

**சங்கர் .வீ**

ஆசிரியர்

**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு

**பழ. ஆசைத்தம்பி**
**பாலசுந்தரம்**
**அ. சந்திரமோகன்**
**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்

**சொ. இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக்**
**கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com


**தலையங்கம்**

# புதிய நீதி தேவதை

சமீபத்தில், இந்திய உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் அவர்களால், ஏற்கனவே கண்களை கருப்புத் துணியால் கட்டிக் கொண்டு ஒரு கையில் தராசும் மற்றொரு கையில் வாளும் வைத்துக் கொண்டு இருக்கும் நீதி தேவதைக்குப் பதிலாக, கண்களை துணியால் கட்டாமல், ஒரு கையில் தராசும் மற்றொரு கையில் அரசியலமைப்புச் சட்டப் புத்தகமும் வைத்துக் கொண்டு இருக்கும் நீதி தேவதை சிலை திறந்து வைக்கப்பட்டது. இது பொதுச் சிவில் சட்டத்தைக் குறிக்கும் நீதி தேவதை என்றும் பாரத மாதாவின் வடிவில் உள்ள நீதி தேவதை என்றும் பலரும் மெச்சிக் கொண்டனர். ஆனால், வாள் இருந்த கையில் அரசியலமைப்புச் சட்டப் புத்தகத்தைக் கொடுத்தது மட்டுமின்றி, புதிய நீதி தேவதையின் நெற்றியில் பொட்டும் வைக்கப்பட்டுள்ளது. அண்ணல் அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு என்கிறது. அந்த அரசியலமைப்புச் சட்டப் புத்தகத்தை நீதி தேவதையின் கையில் கொடுத்துவிட்டு, இந்துப் பெண்கள் மட்டுமே வைக்கக் கூடிய பொட்டை எதற்காக நீதி தேவதையின் நெற்றியில் வைக்க வேண்டும்? இந்துப் பெண்கள் மட்டுமின்றி, இந்து ஆண்களும் பொட்டு வைக்கிறார்கள். பொட்டு வைப்பது என்பது பெண்கள் மத்தியில் பரவலான பழக்கமாக இன்றைய காலத்தில் மாறியுள்ளது என்றாலும் இஸ்லாமியப் பெண்களோ, கிறிஸ்தவ மதப் பெண்களோ பொதுவாக பொட்டு வைப்பது இல்லை. அனைவருக்கும் பாரபட்சமின்றி விருப்பு வெறுப்பின்றி நீதி வழங்க வேண்டும் என்பதைக் குறிக்கும் விதத்தில்தான் நீதி தேவதையின் கண்கள் கட்டப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி, மனித குலத்திற்கு எதிரான தீயவர்களை நியாயமான தீர்ப்பின் மூலம் அழிக்க வேண்டும் என்பதைக் குறிக்கவே வாளும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், வாள் போய் அரசியலமைப்புப் புத்தகம் வந்துள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையே மாற்ற வேண்டும் என்றும் ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி என்றெல்லாம் பேசிக் கொண்டு இந்தியாவின் பன்முகத் தன்மையை அழித்தொழிக்க வேண்டும் என்பதற்காகவே பொதுச் சிவில் சட்டத்தைக் கொண்டு வரும் சங் பரிவார் பாஜக அரசு, நீதி தேவதையின் கையில் அவர்கள் அழிக்கத் துடிக்கும், அழித்துக் கொண்டிருக்கும் அரசியலமைப்புச் சட்டப் புத்தகத்தைக் கொடுத்து நீதி தேவதை சிலையையும்கூட பொருளற்றதாக ஆக்க அல்லது காவிமயமாக்க முயற்சிக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட போது அதன் முகப்புரையில் மதச் சார்பின்மை, சோசலிசம் என்கிற சொற்கள் கிடையாது, அவை பின்னர் சேர்க்கப்பட்டது அதனால் அவற்றை நீக்க வேண்டும் என்று ஆர்எஸ்எஸ் சங் பரிவார் கூட்டத்தினர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ள இவர்கள்தான் அரசியலமைப்புச் சட்டப்படி நீதி வழங்க வேண்டும் என்பதற்காக புதிய நீதி தேவதையின் கையில் அரசியலமைப்பு சட்டப் புத்தகம் கொடுக்கப்பட்டுள்ளது என்று பெருமை பேசுகிறார்கள். பிரதமர் மோடியை அழைத்து தனது வீட்டில் கணபதி பூசை நடத்திய, ராமர் கோயில்-பாபர் மசூதி தீர்ப்பில்கூட எனக்கு உதவியது கடவுள்தான் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அவர்கள் இந்த புதிய நீதி தேவதை சிலையையும் திறந்து வைத்துள்ளார் என்கிறபோது ஒரு சார்பற்ற நீதியை, மதச் சார்பற்ற நீதியை எப்படி எதிர்பார்க்க முடியும்? நிச்சயமாக நீதிபதி அவர்கள் தான் வணங்கும் இந்துக் கடவுளிடம்தான் உதவி கேட்டிருப்பார். அவரும் இஸ்லாமியக் கடவுள் இருந்த இடத்தை இந்துக்களிடம் கொடுத்துவிடச் சொல்லிவிட்டார் போலும். இப்படியெல்லாம் பார்க்காமல் வழக்கில் தனக்கு எதிரில் இருப்ப வர்கள் யார்? எந்த மதம்? என்ன சாதி? அவர் தகுதி

**தலையங்கம் தொடர்ச்சி 8ம் பக்கம்..**

# ஜம்மு – காஷ்மீர்; ஹரியானா தேர்தல்கள் சொல்லும் செய்திகள்

ஹரியானா தேர்தல் முடிவுகள் அனைத்து அரசியல் பார்வையாளர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. மேலும் அனைத்து கள அறிக்கைகளையும் தேர்தல்களுக்கு முந்தைய, பிந்தைய கருத்துக் கணிப்புகளையும் அனேகமாக பொய்யாக்கியுள்ளது. தொடர்ந்து மூன்றாவது முறையாக ஹரியானாவில் பாஜக வெற்றி பெற்று இருக்கிறது. 2014, 2019 மற்றும் சமீபத்திய 2024 மக்களவை தேர்தல்களில் அது பெற்றதை விட இந்த முறை அதிகம் பெற்றுள்ளது. இந்த முடிவுகள் 'எதிர்பார்ப்புக்கு மாறானது', 'ஏற்றுக்கொள்ள முடியாதது' என காங்கிரஸ் கூறியுள்ளது. மேலும் பல்வேறு முறைகேடுகள் குறித்து கேள்விகள் கேட்டு, அரசு நிர்வாக எந்திரத்தின் மோசடி நடவடிக்கைகள் குறித்து புகார் சொல்லியும் பல்வேறு தீவிர பிரச்சனைகளை தேர்தல் ஆணையத்திடம் எழுப்பி உள்ளது. ஜம்மு காஷ்மீர் தேர்தல் முடிவுகள் அனேகமாக எதிர்பார்த்த மாதிரியே வந்துள்ளன. அங்கு தேசிய மாநாட்டு கட்சி, காங்கிரஸ் கூட்டணி பெரும்பான்மைக்குத் தேவையான பாதியளவை சற்று கடந்து சென்றுள்ளது. ஆனால் காங்கிரஸ் மற்றுமொரு வாய்ப்பை தவற விட்டு விட்டது என அது ஹரியானாவை இழந்தது குறித்து நிச்சயமாக சொல்லப்படும். ஜம்முவில் காங்கிரசின் மிக மோசமான செயல்பாட்டையும் இந்த ஹரியானா தோல்வியுடன் இணைத்து வட இந்தியாவில் பாஜகவிற்கு எதிராக காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் போது அது தொடர்ந்து பாதிப்புக்கு உள்ளாவதன் அறிகுறியாக மீண்டும் ஒருமுறை பார்க்கப்படும்.

ஊடக விவாதங்களின் கவனம் ஹரியானா தேர்தல் முடிவுகள் மீது குவிக்கப்படும் என்பது அனைவரும் அறிந்ததே. இருந்தபோதிலும் ஜம்மு காஷ்மீர் தேர்தல் முடிவுகளும் நிச்சயமாக முக்கியத்துவம் வாய்ந்தவைதான். அரசமைப்புச் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற ஜனநாயகம், கூட்டாட்சி கட்டமைப்பு மீது தீவிரப்படுத்தப்பட்ட தாக்குதல் என்பது ஜம்மு காஷ்மீரின் அரசமைப்புச் சட்ட அந்தஸ்தை ஒழித்துக் கட்டியதில் இருந்து தொடங்கியது. ஒரு மாநிலம் ஒரே இரவில் இரண்டு ஒன்றியப் பகுதிகளாக (யூனியன் பிரதேசம்) பிரிக்கப்பட்டது. மேலும் இணையம் முழுமையாக நிறுத்தி வைக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஒட்டுமொத்த எதிர்கட்சியினரும் சிறையில் அடைக்கப்பட்டனர் அல்லது வீட்டுச் சிறைக்குள் வைக்கப்பட்டனர். ஜனநாயகம் தற்காலிகமாக நீக்கப்பட்டது. தொகுதிகள் மறுவரையறைக்கு உட்படுத்தப்பட்டன. அதன்மூலம் தேர்தல் வரைபடத்தில் பெரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஜம்மு காஷ்மீர் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 83 லிருந்து 90 ஆக அதிகரிக்கப்பட்டது. அதிகரிக்கப்பட்ட ஏழில் ஆறு தொகுதிகள் ஜம்முவிற்கு ஒதுக்கப்பட்டன. அதன் மூலம் 47 தொகுதிகளை கொண்ட காஷ்மீர் சமவெளியின் எண்ணிக்கைக்கு கிட்டத்தட்ட இணையாக 43 தொகுதிகள் ஜம்முவிற்கும் ஒதுக்கப்பட்டன. இது இந்த இரண்டு பகுதி மக்கள் தொகை பங்கில் அப்பட்டமான முரண்பாட்டை வெளிப்படுத்துகிறது. காஷ்மீர் சமவெளியின் மக்கள் தொகை 56.4% என்பதோடு ஒப்பிடும்போது ஜம்முவின் மக்கள் தொகை 43. 6% தான். கூடுதல் பிரிவினர்களை உள்ளடக்க எஸ்சி, எஸ்டி வகையினங்கள் மறு சீரமைக்கப்பட்டன. அதன் மூலம் பாஜகவிற்கு சாதகமான தொகுதிகள் உருவாக்கப்பட்டன. இவையெல்லாவற்றுக்கும் மேலாக ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களை நியமிக்கும் தனிப்பட்ட சிறப்பு அதிகாரம் துணை நிலை ஆளுநருக்கு வழங்கப்பட்டது.

இந்தப் பாசிசத் தாக்குதல், தீய நோக்கத்துடன் சிதைத்தல் என்ற பின்னணியில் ஜ&கா முடிவுகள் பார்க்கப்பட வேண்டும். உண்மையில் காஷ்மீர் சமவெளியைப் பொறுத்தவரையில் இந்த வாக்குகளை, அழுத்தம்திருத்தமான எதிர்ப்பு வாக்குகளாகவே பார்க்க வேண்டும். பாஜகவிற்கு மட்டுமல்ல, அதன் முந்தைய கூட்டாளியான பிடிபி-க்கும் ஒரு பாடம் கற்பிக்கவும், பாஜகவிற்கு எதிரான வாக்குகளை சிதறடிக்கும் எண்ணத்துடன் வழங்கப்பட்ட பாஜகவின் திட்டத்தை தோற்கடிக்கவுமான வாக்குகளாகவே பார்க்க வேண்டும்.. மாநில அந்தஸ்தை பறித்தற்கு எதிரான கோபம் காஷ்மீர் சமவெளியோடு மட்டும் நிச்சயமாகக் குறுகிப் போய்விடவில்லை. லடாக்கின் லே, கார்கில் ஆகிய இரு பகுதிகளிலும் ஆழ்ந்த ஏமாற்றத்தை நாம் காணலாம். ஜ&கா தேர்தல் காலத்தில் லே முதல் டெல்லி வரை நடைபெற்ற பருவநிலை பேரணியில் இது மீண்டுமொருமுறை வெளிப்பட்டது. ஜம்முவில் கூடுதல் ஆற்றல்மிக்க, தீர்மானகரமான தேர்தல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், பாஜகவின் கூட்டாட்சிக்கு எதிரான பிரிவினைவாத செயல்திட்டத்திற்கு எதிராக ஜம்முவிலும் உள்ள அதிருப்தியை அறுவடை செய்திருக்கலாம். ஆனால் அப்படியான திறனோ அல்லது அமைப்போ காங்கிரசிடம் நிச்சயமாகவே இல்லை. அதற்கு மாறாக காங்கிரஸ் தேர்தல் நெறிமுறைகள் குறித்து கிஞ்சித்தும் அக்கறை காட்ட வில்லை. அது ஆசிபாவை கொடூரமாக பாலியல் வன்முறையும், கொலையும் செய்த குற்றவாளிகளுக்கு ஆதரவாகப்

பேசிய அவப்புகழ் பெற்ற சவுத்ரி லால் சிங்கை முதலில் மக்களவைத் தேர்தல்களில் உதம்பூரிலும், மீண்டும் தற்போது சட்டமன்றத் தேர்தலில் பாஷோலி தொகுதியிலும் நிறுத்தியது.

ஹரியானாவில் பாஜக அரசாங்கத்திற்கு எதிராக பத்தாண்டுகளாக திரட்டப்பட்ட அதிருப்தியின் மீது சவாரி செய்து தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெறும் என எதிர் பார்க்கப்பட்டது. அதிலும் குறிப்பாக வேளாண் சட்டங்கள், ராணுவத்தில் அக்னிபாத் திட்டம், மல்யுத்த வீராங்கனைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதி ஆகியவற்றுக்கு எதிரான வெகுமக்களின் கோபம் ஹரியானாவில் வெளிப்படையாக தெரிந்தது. ஆட்சிக்கு எதிரான இந்த அதிருப்தி நிச்சயமாக மெய்யானது தான். ஏனெனில் முதலில் மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக அதிகரித்த அளவில் அவப்பெயர் பெற்ற முதலமைச்சர் மனோகர்லால் கட்டாருக்குப் பதிலாக நயாப் சிங் சைனியை முதலமைச்சராக பாஜக மாற்றியது. மேலும் ஒரு சில அமைச்சர்களுக்கு போட்டியிடுவதற்கான வாய்ப்பினை மறுத்தது. அனேகமாக எட்டு அமைச்சர்களும் அவைத் தலைவரும் சட்டமன்றத் தேர்தலில் தோல்வியை தழுவினர். ஆனால் பாஜகவிற்கு எதிராக ஒரு தீர்மானகரமான வெற்றியை பெறுவதற்கு, ஆட்சிக்கு எதிரான இந்த அதிருப்தி மட்டுமே போதுமானதல்ல என்பதை மக்களவைத் தேர்தல்கள் போதுமான அளவிற்கு வெளிப்படுத்தின. முதலமைச்சராக நயாப் சைனியை கொண்டு வந்ததன் மூலம் பாஜக ஆட்சிக்கு எதிரான அதிருப்தி காரணியை வலுவிழக்க செய்தது. அது மட்டுமல்ல ஓபிசி சமூக பிரிவினரையும் தனக்கு ஆதரவாக உறுதிப்படுத்தியது. மேலும் இந்த மாநிலத்தில் பாரம்பரியமான ஜாட் ஆதிக்கத்திற்கு எதிரான சமூக பிளவுக் கோட்டை (Social fault lines) அகலப்படுத்தியது. மக்களவைத் தேர்தல்களில் அரியானாவின் 10 மக்களவை தொகுதிகளில் ஐந்தை தக்கவைப்பதில் பாஜக வெற்றி கண்டது. அதனை அப்படியே சட்டமன்ற தொகுதிகளுக்கு மாற்றினால் 42 தொகுதிகளில் முன்னிலை பெற்ற காங்கிரசை விட அதிக எண்ணிக்கையில் பாஜக 44 தொகுதிகளில் முன்னிலை பெற்றது. மக்களவைத் தேர்தல்களில் காங்கிரஸின் கூட்டணியாக இருந்த ஆம் ஆத்மி கட்சி மீதமுள்ள நான்கு தொகுதிகளில் முன்னிலை பெற்றது.

மக்களவை தேர்தல் அனுபவத்திலிருந்து காங்கிரஸ் போதுமான பாடங்களை கற்றுக் கொள்ளவில்லை என்பது போலவே தெரிகிறது. இதன் காரணமாக காங்கிரஸ் பெற்ற வாக்கின் பங்கு 28.08% லிருந்து 39.09% ஆக 11% மும், அது பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை 31இல் இருந்து 37 ஆகவும் அதிகரித்திருந்த போதிலும் பெரும்பான்மைக்கு தேவையான பாதி அளவை தாண்டிச் செல்வதில் காங்கிரஸ் தோல்வியுற்றது. தீவிரத் தன்மை வாய்ந்த முஸ்லிம் எதிர்ப்பு வெறுப்புணர்வு பரப்புரை இயக்கத்துடன் ஜாட் அல்லாத எஸ்சி-ஓபிசியினரின் துருவச் சேர்க்கையையும் ஒன்றிணைக்கும் பாஜகவின் செயல்திட்டம் மீண்டும் ஒருமுறை தனது ஆட்சிக்கு எதிரான அதிருப்தி காரணியை தடுத்து நிறுத்துவதில் வெற்றி கண்டது. சட்டத்திற்கு புறம்பான பசு பாதுகாப்பு குழுவினருக்கு நயாப் சிங் சைனியின் அப்பட்டமான ஆதரவும், உச்ச நீதிமன்றத்தின் சர்ச்சைக்குரிய எஸ்சி/எஸ்டி உள் ஒதுக்கீடு தீர்ப்பினைத் தொடர்ந்து எஸ்சி/எஸ்டி உள் ஒதுக்கீடு சம்பந்தமான குறி வைக்கப்பட்ட அறிவிப்புகளும் பாஜக செயல்திட்டத்தின் தெளிவான அடையாளங்களாகும். ஒரு தலித் மாநில தலைவரையும் (இந்த சட்டமன்றத் தேர்தலில் அவர் தோல்வியைத் தழுவினார்), குறிப்பிடத்தக்க தலித் நாடாளுமன்ற உறுப்பி னராக குமாரி செலீஜாவையும காங்கிரஸ் கொண்டிருந்த போதிலும், எஸ்சி-ஓபிசி சமூகத்தினரிடம் பாஜகவின் செல்வாக்கை திறன்மிக்க வகையில் தடுத்து நிறுத்துவதில் காங்கிரஸ் தோல்வியுற்றது. மீதமுள்ள 62 தொகுதிகளில் அந்த கட்சி முன்னேறி சென்ற போதும், ராஜஸ்தான் எல்லையில் அமைந்துள்ள ஓபிசி ஆதிக்கம் செலுத்துகிற ஹரியானாவின் அஹிர்வால் மண்டலத்தின் 28 தொகுதிகள் (குர்கான், ரேவாரி, பரிதாபாத், பிவானி-மகேந்தர்கர் மக்களவைத் தொகுதிகள்) காங்கிரஸின் தோல்வியை உறுதி செய்தன.

பாஜக ஹரியானாவில் எதிர்பாராத விதமாக பெற்ற பலன்களை எதிர்வரும் மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், டெல்லி, பிஹார் ஆகிய மாநில சட்டமன்ற தேர்தல் பரப்புரை இயக்கத்திற்கு வலுவூட்ட நிச்சயமாக முயற்சிக்கும். ஆனால் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சட்டீஸ்கர் ஆகிய மாநிலங்களுக்கு 2023 இறுதியில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில் பாஜக ஆச்சரியமான வெற்றி பெற்றிருந்தபோதிலும் சில மாதங்களுக்கு பிறகு உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல்களில் மாபெரும் தேர்தல் அடியை வாங்குவதிலிருந்து பாஜகவை அது தடுத்து நிறுத்தவில்லை. இதனை 2024 மக்களவைத் தேர்தல்கள் தெளிவாகவே நமக்குக் காட்டின. மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், டெல்லி, பிஹார் ஆகிய மாநிலங்களுக்கு நடைபெற இருக்கிற அடுத்த சுற்று சட்டமன்றத் தேர்தல்களில் மோடி அரசாங்கத்திற்கும் சங்கி படையணிக்கும் தீர்மானகரமான தோல்வியை வழங்க மக்கள் இயக்கங்களின் சக்திகளும் இந்தியா முகாமின் கட்சிகளும் நிச்சயமாக உறுதிப்பாட்டுடன் தயாராக வேண்டும். ❐

**(எம் எல் அப்டேட் 8 - 14 அக். 2024 தலையங்கம்)**

**தமிழாக்கம் – செந்தில்**

# சிதம்பரம் நடராசர் கோவில் தனிநாடா? தமிழ்நாடா?

சந்திரமோகன்

**சிதம்பரம் நடராசர் கோவில் நிலங்கள் மீட்கப்பட வேண்டும்!**

“கடலூர் மாவட்ட ஆட்சியர், சிதம்பரம் நடராசர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என சென்னை உயர்நீதிமன்றம் கடந்த அக்.5 ல் உத்தரவிட்டது. ராதாகிருஷ்ணன் என்பவர், ‘சிதம்பரம் நடராசர் கோயிலுக்குச் சொந்தமாக, தமிழ்நாட்டிலும், புதுச்சேரி மாநில காரைக்கால் மாவட்டத்திலும் உள்ள 3,000 ஏக்கர் நிலங்களை மீட்கக் கோரி’, சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் மீது விசாரித்த நீதிபதி தண்டபாணி அவர்கள் , ‘இதுதொடர்பாக விசாரணை நடத்தி 12 வாரத்திற்குள் நிலத்தை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்’ என கடலூர் மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டார்.

சிதம்பரம் நடராசர் கோவில் நிலங்கள், சொத்துக்கள், செயல்பாடுகள் மீதான சர்ச்சைகள் நூற்றாண்டு காலமாக நடைபெற்று வருகின்றன! கடந்த இருபதாண்டு காலமாக நடைபெறும் வழக்குகள், தீர்ப்புகள், கோவில் வளாகத்தில் தீட்சிதர்கள் நடத்தும் சட்டவிரோதமான செயல்பாடுகள், வரவு செலவு முறைகேடுகள் என்பதும் தொடர்கதையாக உள்ளன.

**நிலங்களை மீட்க கோரிய மற்றொரு தீர்ப்பு!**

சில மாதங்களுக்கு முன்னர், தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள், ‘சிதம்பரம் நடராசர் கோயில் 2008 முதல் 2014 ம் ஆண்டு வரையில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இருந்தபோது, 3 கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் ஈட்டிய நிலையில், தீட்சிதர்கள் கட்டுப்பாட்டுக்கு வந்தபிறகு, ஆண்டுக்கு ரூ. 2 லட்சம் ரூபாய் மட்டுமே வருமானம் காட்டப்பட்டுள்ளதால், கோவில் வருவாய் கணக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும்’ என சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

நீதிபதிகள் ஆர்.சுரேஷ் குமார் மற்றும் எஸ். சவுந்தர் ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வில் இந்த வழக்கு விசாரணை நடந்து வந்தது. விசாரணையில், கடந்த செப்டம்பர் 19 ல், தீட்சிதர்கள் தரப்பில், கோயிலின் தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்கு விவரங்களை மூடி முத்திரையிடப்பட்ட உரையில் தாக்கல் செய்யப்பட்டது. மேலும், கோயிலுக்குச் சொந்தமான 1,000 ஏக்கர் நிலத்தை அறநிலையத் துறையின் தாசில்தார் நிர்வகித்து வருவதாகவும், அந்த நிலத்திலிருந்து வாடகை வருவாயாக வெறும் 93 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்கப்படுவதாகவும் தீட்சிதர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

உச்சகட்டமாக, மோசடிகள் செய்த தீட்சிதர்கள் தரப்பில் இருந்து, ‘சிதம்பரம் கோயிலுக்கு மன்னர்கள் மற்றும் புரவலர்கள் தானமாக வழங்கிய 3,000 ஏக்கர் நிலத்தில், தற்போது 1000 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளதாகவும், அதுகுறித்து தமிழ்நாடு அரசு அறிக்கை தர வேண்டும்’ என்று குற்றம் சாட்டப்பட்டது. இதற்குப் பதிலளித்த இந்து சமய அறநிலையத் துறை, ‘கோயிலுக்கு 3,000 ஏக்கர் நிலம் இருந்த நிலையில், 2,000 ஏக்கர் நிலத்தை தீட்சிதர்கள் தனி நபர்களுக்கு விற்பனை செய்துவிட்டதாக’ குற்றம் சாட்டியது.

“2,000 ஏக்கர் நிலம் விற்பனை செய்யப்பட்டது குறித்தும், 1000 ஏக்கரில் இருந்து ஒரு லட்சத்துக்கும் குறைவாகவே ஆண்டு வருவாய் கிடைப்பது குறித்தும்,” அதிர்ச்சி தெரிவித்த நீதிபதிகள், “பக்தர்களின் காணிக்கை கணக்கில் வைக்காதது குறித்தும் 2017 - 2018ஆம் ஆண்டில் இருந்து 2021 - 2022ஆம் ஆண்டு வரையிலான வரவு - செலவு கணக்கு புத்தகங்களை தாக்கல் செய்யவும்” தீட்சிதர்கள் தரப்புக்கு உத்தரவிட்டனர்.

மேலும், அந்த வழக்கில், தீட்சிதர்கள் விற்பனை செய்ததாக கூறப்படும் சிதம்பரம் நடராசர் கோயிலுக்குச் சொந்தமான 2,000 ஏக்கர் நிலங்கள் குறித்த விவரங்களை ஆவணங்களுடன் அறிக்கையாக தாக்கல் செய்ய இந்து சமய அறநிலையத் துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது; கோயிலுக்குச் சொந்தமாக தற்போது எவ்வளவு பரப்பு நிலம் உள்ளது என்பது குறித்து தாசில்தார் அறிக்கை தாக்கல் செய்யவும் உத்தரவிட்டனர்.

சிதம்பரம் நடராசர் கோவில் நிர்வாகம் மற்றும் செயல்பாட்டில் நிலவுவது சட்டத்தின் ஆட்சியா? தீட்சிதர்களின் ஆட்சியா? என்ற விவாதம் நீண்ட காலமாக நிலவுகிறது. தீட்சிதர்கள் தனிச்சொத்து போல சிதம்பரம் நடராசர் கோவில் இருப்பதால், கோவிலுக்கு பாத்தியப்பட்ட மொத்த விவசாய

நிலங்கள், குடிமனைகள், கட்டடங்கள், அவற்றில் தற்போதுள்ள குத்தகை மற்றும் வாடகைதாரர்கள் பட்டியல் எதுவும் தமிழ்நாடு அரசிடம் இல்லை.

### சங்கப் பரிவாரத்தின் ஆதரவு

சிதம்பரம் கோவில், தீட்சிதர்கள் மற்றும் தமிழ்நாடு மடங்கள், கோவில்களின் மீது, தமிழ்நாடு அரசாங்கம் கட்டுப்பாடு செலுத்தக் கூடாது என ஆர்எஸ்எஸ் சங்கப் பரிவாரம் தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறது.

கடந்த 2022 ம் ஆண்டில், மதுரையில், விசுவ இந்து பரிசத் நடத்திய அகில பாரத துறவியர் மாநாட்டில் "தமிழ்நாடு அரசாங்கம் கோவில்களை விட்டு வெளியேற வேண்டும் " என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு வினையாற்றிய இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, "சிதம்பரம் நடராஜர் கோயில் நிர்வாகம் மற்றும் தீட்சிதர்களுக்கு எதிராக அறநிலையத் துறை செயல்படாது."எனவும், "ஆதீனங்களின் பாரம்பரிய நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை தலையிடாது" எனவும் அறிவித்தார். தமிழ்நாடு அரசாங்கத்தின் இத்தகைய அடிபணிந்து போகும் போக்கு தீட்சிதர்களின் அராஜகத்தை அதிகரிக்கவே செய்திருக்கிறது.

சிதம்பரம் நடராஜர் கோயில் நிர்வாக நிதி முறைகேடுகள் மீது தொடர்ச்சியானப் புகார்கள் வந்ததால், 2022 ஜூன் மாதத்தில், அதுகுறித்து விசாரிக்க, ஆய்வுசெய்ய சிதம்பரம் நடராஜர் கோயிலுக்குள் இந்துசமய அறநிலையத் துறையினர் சென்றனர்; அப்போது, கோவில் நிர்வாக கணக்கு விவரங்களை தீட்சிதர்கள் தர மறுத்ததோடு, ஆய்வு நடத்த அரசு அதிகாரிகளை அனுமதிக்க முடியாது எனவும் விவாதம் செய்து அறநிலையத் துறையினரை வெளியே அனுப்பி வைத்தனர்.

### சிதம்பரம் தீட்சிதர்களின் தொடரும் குற்றமய நடவடிக்கைகள்!

கடந்த 2019 ல் தனது மகனுக்கு அர்ச்சனை செய்யச் சென்ற லதா என்ற 53 வயது பெண்மணி, தீட்சிதரிடம் கேள்வி கேட்டதற்காக அவரது கன்னத்தில் ஒரு தீட்சிதர் அறைந்து விட்டார்; அவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டும் கைது செய்யப்படவில்லை. அதேபோல, கடந்த 15.2. 2022 அன்று சிதம்பரம் நடராசர் கோவிலுக்குள் கடவுளை வழிபடச் சென்ற ஜெயசீலா என்ற தலித் பெண் ஒருவரை, இருபது தீட்சிதர்கள் மறித்து உள்ளே போகவிடாமல் தடுத்ததுடன், அவரின் சாதியைச் சொல்லி இழிவாகவும் பேசினர். அவர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது; முதல் தகவல் அறிக்கையில் குற்றவாளி தீட்சிதர்களின் பெயர்கள் கூடப் பதிவு செய்யப் படவில்லை; அவர்கள் கைது செய்யப்படவும் இல்லை.

பெண்களிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டது, பக்தர்களை தாக்குவது, தட்சணையை பிரிப்பதில் தீட்சிதர்களுக்குள் மோதல் ஏற்பட்டு ஒரு தீட்சிதர் கொல்லப்பட்ட வழக்கு, கே.ஆடூர் செல்வராஜ் என்பவரை, நிலத்தரகர் ராயரை தீட்சிதர்கள் கொன்ற வழக்கு எனப் பல்வேறு குற்றமய / கிரிமினல் வழக்குகள் உள்ளன. ஆனால், எவரும் கைது செய்யப்படவில்லை.

கடந்த 2000 ம் ஆண்டில், தமிழில் பாடுவதை வலியுறுத்திய சிவனடியார் ஆறுமுகசாமியைத் தீட்சிதர்கள் தாக்கிய வழக்கில், சம்பந்தப்பட்ட அனைத்து தீட்சிதர்களும் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர். மேலும், அதற்குப் பிறகு போராட்டத்தால் நிலைநாட்டப்பட்ட, 'சிற்றம்பல மேடையிலேறி தமிழில் பாடும் உரிமை' யை தடுக்க, கொரோனா ஊரடங்கைக் காரணம் காட்டி பக்தர்கள் சிற்றம்பல மேடை ஏறுவதற்கு தடைவிதித்து, 'தீட்சிதர்களைத் தவிர வேறு யாரும் சிற்றம்பல மேடை ஏறி வழிபடக் கூடாது' என எழுதப்படாத விதியை தொடர்ந்து செயல்படுத்தி அராஜகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல்வேறு நிதி முறைகேடுகள் தில்லை நடராசர் கோவிலில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் உள்ள சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு சுமார் 3,000 ஏக்கர் நிலம் மற்றும் பலகோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள், பல்லாயிரம் கோடி மதிப்புள்ள கட்டிடங்கள், நகர்ப்புற சொத்துக்கள் உள்ளன. ஆனாலும், சுமார் 400 ஏக்கர் நிலங்கள் பற்றிய கணக்கு மட்டுமே இந்து அறநிலையத் துறை வசமுள்ளது. சிதம்பரம் நடராஜர் கோவில் சொத்துக்கள், சுமார் 400 தீட்சிதர் ஸ்மார்த்த பிராமணர் குடும்பங்களின் சொத்தாக மாற்றப்பட்டுள்ளது.

ஸ்மார்த்த பிராமணர்கள் பிடியில் சிக்கிய சிதம்பரம் நடராசர் கோவில்!

சிதம்பரத்தில் அமைந்துள்ள 'ஆடவல்லான்' என அழைக்கப்படுகிற சிவனின் ஒரு கோலம் தில்லை நடராஜர் ஆவார். சிதம்பரம் நடராசர் கோயிலின் பரம்பரை அறங்காவலர்களாக பணியாற்றுகிற தீட்சிதர்கள், வேதங்கள், யாகங்கள் கற்ற வேதவேள்வி வழிபாட்டை மட்டுமே ஏற்கிற ஆரியமரபு சார்ந்த ஸ்மார்த்த பிராமணர்களின் ஒரு தனி வகையான சிறிய குழு ஆவர்.

ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், சோழர் ஆட்சி காலத்தில், சிவன் கோவிலான சிதம்பரம் நடராசர் கோவில் நிர்வாகம் சிவனை தங்கள்

கடவுளாக கொள்ளாத, (இந்திர வழிபாடு கொண்ட) ஸ்மார்த்த பிராமணர் தீட்சிதர்கள் பிடிகளுக்குள் சிக்கிக் கொண்டது வரலாற்று முரணாகும்.

**தீட்சிதர்கள் சாம்ராஜ்யம் முடிவு கட்டப்பட வேண்டும்; சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும்!**

❁ சிவனை தங்கள் கடவுளாக கொள்ளாத, வேதவேள்வி வழிபாட்டை ஏற்கிற ஆரிய மரபு சார்ந்த ஸ்மார்த்த பிராமணர்களின் பிடியிலிருந்து மீட்டு, சிதம்பரம் நடராசர் கோவிலை தமிழ்நாடு அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திட, சட்டமன்றத்தில் ஒரு தனிச் சட்டம் இயற்றிட வேண்டும்.

❁ சிதம்பரம் நடராசர் கோவில் நிலங்கள் மீட்கப்பட்டு, குத்தகை விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

❁ சிதம்பரம் நடராசர் கோவில் விசயத்தில், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை தமிழ்நாடு அரசு நிலை நாட்டிட வேண்டும்.

❁அனைத்து சாதி மக்களும் எவ்வித வேறுபாடோ பாரபட்சமோ இன்றி சுதந்திரமாக அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் வழிபாடு செய்வது இந்திய அரசமைப்பு சட்டம் வழங்கும் உரிமையாகும்; அந்த உரிமை சிதம்பரம் நடராசர் கோவிலிலும் உறுதி செய்யப்பட வேண்டும்.

❁சிதம்பரம் நடராசர் கோவில் தெற்கு வாசல் நந்தனார் நுழைந்த வாசல் என்பதால் நீண்ட காலமாக சுவர் கட்டப்பட்டு பூட்டிக் கிடக்கிறது. அத்தீண்டாமைச் சுவரை உடனடியாக அகற்றி தெற்கு வாசல் பக்தர்களுக்காக திறக்கப்பட வேண்டும்

❁ தில்லை நடராசர் கோவிலில் இதுவரை தீட்சிதர்கள் நடத்திய அனைத்துவகை சட்ட விரோதமான செயல்கள் பற்றியும், (கொலைகள், சாதிய வன்கொடுமைகள், பாலியல் சீண்டல்கள், பெண் பக்தர்களை அவமானப்படுத்துதல், குழந்தை திருமணங்கள், சிற்றம்பல மேடையில் தமிழில் பாடும் உரிமையை தடுப்பது, நிதி முறைகேடுகள், நில விற்பனைகள் போன்றவை) நீதிபதி தலைமையிலான முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

❁ சிதம்பரம் நடராஜர் கோவிலில் தீட்சிதர்கள் அரங்கேற்றி வரும் குற்றமய செயல்பாடுகள் முடிவுக்கு கொண்டுவர கிரிமினல் தீட்சிதர்களை குற்றவாளி கூண்டில் நிறுத்த வேண்டும்; சிதம்பரம் நடராஜர் கோவிலை தமிழ்நாடு அரசாங்கம் தனது நேரடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும்! ❐

**தலையங்கம் தொடர்ச்சி...**

என்ன? என்றெல்லாம் பார்க்காமல் நியாயத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நீதி தேவதையின் கண்கள் கட்டப்பட்டுள்ளன. அப்படி கட்டியிருக்கும்போதே தங்களது மத நம்பிக்கையின் அடிப்படையில், விருப்பு வெறுப்பின் அடிப்படையில் நீதிபதிகள் பேசுவதும் தீர்ப்பு வழங்குவதும் ஏற்கனவே நடைமுறைக்கு வந்துவிட்டதால், இனி கண்ணைக் கட்ட வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டார்களோ?. மத்திய பிரதேச, கர்நாடகா உயர்நீதிமன்ற நீதிபதிகள் சிலர் வெளிப்படையாகவே இஸ்லாமியர், கிறிஸ்தவர்களுக்கு எதிராக வெறுப்பு அரசியல் பேசுகிறார்கள். தமிழகத்தில் கூட உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆர்எஸ்எஸ் சாகாக்களில் பங்கெடுப்பதும், ஆர்எஸ்எஸ் கூட்டங்களில் பேசுவதும் செய்கிறார்கள். இவர்களிடத்தில் எப்படி ஒரு சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு நியாயமான தீர்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியும். இப்படிப்பட்ட சூழலில்தான், அரசியலமைப்புச் சட்ட முகவுரையில் இருந்து மதச்சார்பின்மை, சோசலிசம் என்கிற சொற்களை நீக்க வேண்டும் என்று தொடுக்கப்பட்ட வழக்கில் கடந்த அக்.21 அன்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு வந்தபோது, நீதிபதி சஞ்சீவ் கண்ணா மனுதாரர்களைப் பார்த்து பல கேள்விகளைக் கேட்டார். இந்தியா மதச் சார்பற்ற நாடாக இருக்க விரும்பவில்லையா நீங்கள்? மதச் சார்பின்மை இந்திய அரசியலமைப்பின் அடிப்படை கட்ட மைப்பின் ஒரு பகுதியாகும் என்றும் பல தீர்ப்புகள் மதச் சார்பின்மையின் அடிப்படையில்தான் வழங்கப்பட்டுள்ளன என்றும் சோசலிசம் என்கிற சொல்லானது சமத்துவத்தையும் நாட்டின் செல்வங்கள் சமமாகப் பங்கிடப்பட வேண்டும் என்பதையும் குறிக்கிறது என்று கூறினார். சங்கிக் கூட்டத்தைச் சேர்ந்த மனுதாரர்கள், நாங்கள் மதச் சார்பின்மை வேண்டாம் என்று சொல்லவில்லை, இந்தியா பழங்காலத்தில் இருந்தே மதச்சார்பற்ற நாடாகத்தான் இருக்கிறது இந்த இரு வார்த்தைகளும் இடையில் சேர்க்கப்பட்டதால்தான் எதிர்க்கிறோம் என்று பேசி மழுப்பினார்கள். இந்திய விடுதலைப் போரில் எந்தவொரு பங்களிப்பும் செய்யாத, ஆங்கிலேயருக்கு மன்னிப்புக் கடிதம் கொடுத்த சாவர்க்கரின் வாரிசுகள் தற்போது ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு எல்லாவற்றையும் மாற்றி இந்தியாவை இந்து ராஷ்டிரமாக மாற்றிட இடைவிடாமல் வேலை செய்து வருகிறார்கள். ஆர்எஸ்எஸ் அதன் 100வது ஆண்டை கொண்டாட இருக்கிறது. ஆர்எஸ்எஸ் அடிப்படையிலேயே சதி வேலைகளுக்குப் பெயர் பெற்ற அமைப்பாகும். அதன் இந்து ராஷ்டிரக் கனவை இந்திய மக்கள் மதம், சாதி, மொழி கடந்து ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும். இந்தியாவின் பன்முகத் தன்மையை, இந்திய அரசியலமைப்பை, சனநாயகத்தை பாதுகாத்திட வேண்டும். ❐

# இலங்கை மக்கள் வழங்கிய எதிர்பாராத தீர்ப்பு

இலங்கை அதிபர் தேர்தலின் முடிவுகள் பெரும் ஆச்சரியத்தை அளித்துள்ளன. இலங்கையின் அரசியலில் நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்தி வந்த இலங்கை சுதந்திர கட்சி, ஐக்கிய தேசிய கட்சி ஆகிய இரண்டு கட்சிகள் அல்லது கூட்டணிகளை நிராகரித்து இலங்கை ஒரு புதிய தேர்வை தேர்ந்தெடுத்துள்ளது. தேசிய மக்கள் சக்தி (என்பிபி) கூட்டணியின் ஆதரவு பெற்ற வேட்பாளரான, ஜனதா விமுக்தி பெரமுனா (ஜேவிபி) தலைவர் அனுரா குமார திசநாயகே அதிபராக வெற்றி பெற்றுள்ளார். முன்னுரிமை அடிப்படையிலான இரண்டாம் கட்ட வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது. வெற்றிக்கான 50% அளவை விட அவர் குறைவான வாக்குகளையே பெற்றார். இருந்தபோதும், அவருடைய போட்டியாளர்களை விட பெருமளவு முன்னிலை பெற்ற காரணத்தால் அவர் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார். திசநாயகே 42.31% வாக்குகளும், இரண்டாவதாக வந்த சமகி ஜன பலவேகய தலைவர் சஜித் பிரேமதாச 32.76% வாக்குகளும் பெற்றனர். ஆட்சியிலிருந்த அதிபர் ரணில் விக்கிரமசிங்க 17.27% வாக்குகளுடன் மூன்றாவது இடத்தையே பிடிக்க முடிந்தது.

இலங்கையின் தேர்தல் அரங்க மையத்திற்கு ஜேவிபி/என்பிபி வந்த நிகழ்வு கண்கவரும் விதத்தில், திடீரென நிகழ்ந்த ஒன்று போல தோன்றலாம். ஏனென்றால் ஐந்தாண்டுகளுக்கு முன்பு திசநாயகே 3% க்கு சற்று கூடுதலான வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். இருந்தபோதிலும் இலங்கையில் பல பத்தாண்டுகள் நன்கு அறியப்பட்ட ஒரு அரசியல் கட்சியாக ஜேவிபி இருந்து கொண்டிருக்கிறது. தனியாக பிரிந்து வந்த கம்யூனிச குழுவாக ரோகன விஜேவீர அவர்களால் 1965இல் இது அமைக்கப்பட்டது. 1971 இல் அதிகாரத்தைக் கைப்பற்ற அரசுக்கு எதிரான தோல்வியுற்ற கலகத்திற்கு ஜேவிபி தலைமை தாங்கியது. அதன் காரணமாக ரோகன விஜேவீர, பிற தலைவர்கள், ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர். 1977இல் விஜேவீர விடுதலை செய்யப்பட்டார். ஜேவிபி தேர்தல் களத்தில் நுழைந்தது. 1982ல் நடைபெற்ற அதிபர் தேர்தலில் 4.16% வாக்குகளுடன் மூன்றாம் இடத்தையே அவர் பிடித்தார். 1987-ல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த காலகட்டத்திற்குள் தமிழர்களுக்கு எதிராக தீய சிங்கள பேரினவாதத்தை தழுவிக் கொண்ட ஜேவிபி, அரசுக்கு எதிராக மீண்டுமொரு திட்டமிட்ட கலகத்தை அரங்கேற்றியது. அதுவும் தோல்வியைத் தழுவியது. விஜேவீரவின் இறப்புக்குப் பிறகு 1994 இல் அப்போதைய முதன்மை எதிர்க்கட்சியான எஸ்எல்எஃப்பி-ஐ, ஜேவிபி ஆதரித்தது. 2004 இல் அது யூபிஎஃப்ஏ அரசாங்கத்தில் இணைந்தது. மேலும் எல்டிடிஈ-க்கு எதிரான போரை ஆதரித்தது. இலங்கையின் இடது இயக்கத்திலிருந்து எழுந்து வந்திருந்த போதிலும், கடந்த வந்த பல ஆண்டுகளில் தீவிர சிங்கள பேரினவாத குணத்தை அது பெற்றது. சில முக்கிய தருணங்களில் இதுவே அதன் முதன்மை இயக்கியாகவும் செயல்பட்டது.

எவ்வாறாயினும் 2024 இல் எதிர்பாராமல் நிகழ்ந்த ஜேவிபி/என்பிபி வெற்றிக்கான தூண்டுதல், மார்ச் 2022 முதல் இலங்கையில் பற்றிப் படர்ந்த அர்கலயா (போராட்டம்) என அறியப்படும் பரந்த மக்கள் எழுச்சியில் இருந்து வந்தது. இந்த எழுச்சி ஆளும் ராஜபக்ச அரசாங்கத்தை ஆட்சியை விட்டு அகற்றியது. மேலும் இலங்கை ஆட்சி நிர்வாகத்திலிருந்து அவர் குடும்பத்தினரின் கட்டுப்பாட்டை முடிவுக்குக் கொண்டு வந்தது. தவறான நிர்வாகம், மோசடி, ஊழல் காரணமாக ஏற்பட்ட தீவிர பொருளாதார நெருக்கடி, நட்புசார் முதலாளித்துவம், ஆற்றல் துறையின் ஒப்பந்தங்களை அதானிக்கு வழங்க மோடி அரசாங்கத்தின் நெருக்கடி உள்ளிட்ட இலங்கையின் பொருளாதார இறையாண்மையை வலுவிழக்கச் செய்த அன்னிய நாடுகளின் நெருக்கடிகள் ஆகியவை இலங்கையை தொடர்ந்து நிலையற்ற சூழலுக்குள் தள்ளின. இது இலங்கையின் பொருளாதாரம், ஆட்சி நிர்வாகத்தின் மீது ராஜபக்ச குடும்பத்தினரின் விரிவடைந்து வந்த கட்டுப்பாட்டுக்கு எதிரான மக்களின் கோபத்துடன் இணைந்தது. மேலும் ராஜபக்ச சகோதரர்களான கோத்தபய, மகிந்த ஆகியோர் மீது அதீத வெறுப்பையும் உருவாக்கியது. மாற்றத்திற்கான ஆழமான தேடலை அர்கலயா எதிரொளித்தது. அதனையே தேர்தல் முடிவுகளும் எதிரொளிக்கின்றன. இந்த பரந்த மக்கள் தேடலின் பயனாளியாக திசநாயகே மாறியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த முடிவுகள் இலங்கை சமூகத்தின் சிதைந்த நிலையையும் எதிரொளிக்கின்றன. தமிழர்கள், முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்துகிற பகுதிகளில் திசநாயகே மிகவும் குறைவான வாக்குகளையே பெற்றுள்ளார். இல்லையென்றால் முதல் கட்டத்திலேயே அவர் பெற்ற வாக்குகளின் அளவு 50%-ஐ தாண்டியிருக்கும். இரண்டாவது கட்டத்தில் இரண்டாவது முன்னுரிமை அடிப்படையிலான வாக்குகள் எண்ணப்பட்ட போது பிரேமதாச திசநாயகேவை விட முன்னிலை பெற்றிருந்தார். பொருளாதார மீட்சியை ஏற்படுத்துதல், ஊழலை அடியோடு ஒழித்தல், இலங்கையின் அரசியல், பொருளாதார

இறையாண்மையை பாதுகாத்தல் ஆகியவை குறித்த அனேக வாக்குறுதிகளை திசநாயகேவின் பரப்புரை இயக்கம் கொடுத்திருந்தது. ஆனால் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினரின் நம்பிக்கையை பெறுவதற்கான, மெய்யான உறவுகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் எதுவுமில்லை. இலங்கையில் திசநாயகே உண்மையிலேயே ஒரு புதிய தொடக்கத்தை நிகழ்த்த விரும்பினால் பொருளாதாரக் கொள்கை மாற்றங்களின் அடிப்படையில் மட்டுமே அதனைச் செய்ய முடியாது. சிறுபான்மையினருடன் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். உண்மையை ஏற்றுக் கொள்வது, நீதியை வழங்குவது ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே உண்மையான நல்லிணக்கம் ஏற்பட முடியும். இப்போது திசநாயகேவின் கைகளில் தான் பந்து உள்ளது. செயலாற்ற வேண்டியது அவர்தான்.

இலங்கையில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் இந்திய வெளியுறவுக் கொள்கைக்கும் முக்கியமான சோதனையாகும். மோடி காலத்தில் அனேகமாக அனைத்து அண்டை நாடுகளிலிருந்தும் இந்தியா அதிகமாக தனிமைப்பட்டு நிற்கிறது. தெற்காசிய நாடுகளின் மண்டல கூட்டமைப்புக்கான முக்கிய தளமாக விளங்கும் சார்க் அனேகமாக கைவிடப்பட்டு விட்டது. அமெரிக்காவுடன் மட்டுமல்ல, இஸ்ரேலுடனும் அதிகரித்து வரும் இந்தியாவின் போர்தந்திர ரீதியிலான நெருக்கமும் இணைவும் தனது அண்டை நாடுகளில் இருந்து இந்தியா தனிமைப்படுவதற்கு பங்களிப்பு செய்துள்ளது. அதானிக்கும் பிற பெரிய கார்ப்பரேட்டுகளுக்கும் ஒப்பந்தங்களை பெற்றுத் தருவதற்காக, அண்டை நாடுகளுக்கு நெருக்கடி கொடுக்கும் மோடி அரசாங்கத்தின் கொள்கைகளால் இந்த அவநம்பிக்கை ஆழமடைந்துள்ளது. ஆஸ்திரேலியா முதல் வங்கதேசம் வரை, இலங்கை முதல் கென்யா வரை அதானியின் நலன்களுக்கு சேவை செய்ய மோடி தொடர்ந்து கடுமையாக உழைப்பது அனைவராலும் நன்கு அறியக்கூடியதாக இப்போது ஆகியுள்ளது. வங்கதேசத்திலும் இலங்கையிலும் உள்ள புதிய ஆட்சியாளர்கள் அதானியின் ஒப்பந்தங்களை ரத்து செய்து விட்டால், அது நமது கிழக்கத்திய, தெற்கத்திய அண்டை நாட்டினர் இந்தியாவுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கையல்ல; மாறாக அவர்களது சொந்த பொருளாதார நலன்களை பாதுகாப்பது மட்டுமே.

கடந்த ஓராண்டாக பாலஸ்தீனியர்கள் மீது இடைவிடாத இனப்படுகொலையை நெதன்யாகு ஆட்சி நிகழ்த்திக் கொண்டுள்ளது. தற்போது இந்தத் தாக்குதல் லெபனான் மீதான போராக தீவிரமடைகிறது. இவ்வேளையில் இஸ்ரேலுக்கு மோடி அரசாங்கம் அளிக்கிற ஆதரவும் தெற்கு, மேற்கு ஆசியாவில் இந்திய வெளியுறவுக் கொள்கை அதிகரித்த அளவில் வெறுக்கப்படுவதற்கு காரணமாகிவிட்டது. வங்கதேசத்திலும், இன அழிப்பின் வலிமிகுந்த வரலாற்றை கொண்டுள்ள இலங்கையிலும் உள்ள சிறுபான்மை சமூகத்தினரின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதை இந்தியா நிச்சயமாக வலியுறுத்த வேண்டும். மேலும் சிங்கள புத்தமத தீவிரவாதிகளுடன் கூட்டணியை கட்டமைப்பதன் மூலம் இன்று ஆர்எஸ்எஸ்-சின் இருத்தல் இலங்கையில் அதிகரிக்கிறது. ஆனால் இந்தப் புதிய ஆட்சிகளை இந்தியாவுக்கு எதிரானது அல்லது சீனாவுக்கு ஆதரவானது என முத்திரை குத்துவதற்கு கண்டிப்பாக அவசரப்படக் கூடாது. இந்திய வெளியுறவுக் கொள்கை இருதரப்பு நாடுகளுக்கு இடையேயான உறவுகள், மண்டல ஒத்துழைப்பு என்ற உணர்வில் திசநாயகே அரசாங்கத்துடன் நெருக்கமாக இணைந்து செயல்பட முடுக்கி விடப்பட வேண்டும். ❐

## பேராசிரியர் ஜி.என். சாய்பாபாவிற்கு செவ்வணக்கம்!



*பத்தாண்டு கால சட்டவிரோத சிறைவாசம் மற்றும் சித்திரவதைக்குப் பிறகு, கடந்த 2024 மார்ச் மாதம் விடுதலையான ஜிஎன் சாய்பாபா, ஹைதராபாத் நிஜாம் மருத்துவ அறிவியல் கழகத்தில் 12.10.2024 அன்று காலமானார். தொடர்ச்சியான அரச அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட அவர், ஜனநாயகம், நீதி மற்றும் சுதந்திரத்துக்கான போரில் அசைக்க முடியாத போராளியாக நினைவுகூரப்படுவார். தோழர். சாய்பாபா, தலைமுறை தலைமுறையாக மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு பாசிச எதிர்ப்பு போராட்டத்தின் எழுச்சியூட்டும் அடையாளமாக திகழ்வார்! அவரை சிறையிலடைத்து சித்தரவதை செய்தவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள் அவருடைய அர்பணிப்பையும் தைரியத்தையும். தோழர் சாய்பாபாவிற்குச் செவ்வணக்கம்!*

சாம்சங்:-

# மூலதனத் தாக்குதல் இருக்கும் வரை தொழிலாளர் போராட்டங்களும் இருக்கும்

**தேசிகன்**

சென்னையை அடுத்துள்ள சுங்குவார் சத்திரத்தி லுள்ள கொரிய சாம்சங் நிறுவனத்தில் 16 ஆண்டுகள் பணியாற்றி வந்த தொழிலாளர்கள் சாம்சங் இந்தியா ஒர்க்கர்ஸ் யூனியன் (SIWU) என்ற சங்கத்தைத் துவக்கினார்கள். அது சிஐடியு மையத்துடன் இணைக்கப்பட்டது. 1700 நிரந்தரத் தொழிலாளர்களில் 1350 பேர் இந்தச் சங்கத்தில் உறுப்பினர்களானார்கள். சாம்சங் நிர்வாகமோ சங்கத்தை ஏற்க, அங்கீகரிக்க மறுத்தது மட்டுமின்றி, சங்கத்தின் பெயரில் சாம்சங் என்ற கம்பெனியின் பெயர் இடம் பெறக் கூடாது என்றது. சாம்சங் இந்தியா ஒர்க்கர்ஸ் யூனியன் என்ற பெயரில் சங்கத்தைப் பதிவு செய்யக்கூடாது என்றது.

சட்டப்படி சங்கத்தைப் பதிவு செய்வ தற்கு மாறாக, திமுக அரசின் தொழிலாளர் துறை சங்கப் பதிவை நிறுத்தி வைத்தது. சாம்சங் நிர்வாகம் தனக்கு சாதகமான தொழிலாளர்களைக் கொண்ட குழுவை ஏற்படுத்தி தொழிலாளர் கமிட்டி அமைத்து அதனுடன்தான் பேசுவேன் என்று அறிவித்தது.

இந்தச் சூழலில் பெரும்பான்மை சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும். தொழிற்சங்க சட்டப்படி முறையாக சங்கத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் தொழிலாளர்கள் கோரிக்கையில் இணைந்து கொண்டது. எவ்வித சமரச முயற்சிகளும் சாம்சங் நிர்வாக தரப்பிலும், தொழிலாளர் துறை தரப்பிலும் எடுக்கப்படாத காரணத்தால் திட்டமிட்டபடி செப்டம்பர் 9ம் தேதியிலிருந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

### சாம்சங் நிர்வாகத்தின் அடாவடிச் செயல்கள்

தொழிலாளர்கள் ஆலை வாயிலில் கூடி நிற்கக் கூடாது என்றது. சட்டத்துக்குப் புறம்பாக தொழிலாளர் உரிமைகளை மறுக்கிற தொழிலாளர் விரோத நடைமுறைகளை கையாண்டது. மனிதவள மேம்பாட்டுத் துறையிலிருந்து தொழிலாளர் குடும்பங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆசை வார்த்தைகள் கூறி, மிரட்டி பணிய வைக்கப் பார்த்தது. வேலை நிறுத்த நாட்களுக்கு சம்பளம் இல்லை என்றதோடு ஒவ்வொரு வேலை நிறுத்த நாளுக்கும் 8 நாட்கள் சம்பளம் பிடித்தம் செய்யப்படும் என்றது. செப்டம்பர் மாதம் வேலை பார்த்த 8 நாட்கள் சம்பளத்தையும்கூட கொடுக்க மறுத்தது. நிர்வாகத்திற்கு விசுவாசமான தொழிலாளர்களைக் கொண்டு பத்திரிகை, சமூக ஊடகங்களில் வேலை நிறுத்தத்திற்கு எதிராக பேச வைத்து விசமப் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. ஆலையை வேறு மாநிலத்துக்கு மாற்றுவோம், தமிழகத்துக்கு முதலீடு வராது என்று நாடகமாடியது.

### பலமுனைகளிலும் தாக்குதல்

தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்துக்கு எதிராக பத்திரிகையாளர் என்ற பெயரில் சில கார்ப்பரேட் ஜால்ராக்களும், பாஜக சங்கிகளும் சாம்சங்கிற்கு வக்காலத்து வாங்கினார்கள். 'கம்யூனிஸ்ட்டுகள் ஆலையை மூடி விடுவார்கள், சீனக் கைப் பொம்மைகள், தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் செய்துவிடுவார்கள், வளர்ச்சிக்கு எதிரானவர்கள், தொழிலாளர்கள் போராட்டத்தில் மாவோயிஸ்டுகள், தீவிரவாதிகள் ஊடுருவி விட்டார்கள் என்றார்கள். நிர்வாக திறமையின்மையால், வரி ஏய்ப்பு செய்ததால், தொழில்நுட்ப மேம்படுத்துதலைச் செய்யாததால், முதலாளிகளுக்கு இடையிலான போட்டியின் விளைவால் மூடப்பட்ட ஆலைகளையெல்லாம் கம்யூனிஸ்டுகள் மூடிவிட்டதாகக் கதை அளந்தனர்.

பாஜக மாநிலத் துணைத்தலைவர் திருப்பதி, மத்திய தொழிலாளர் அமைச்சர் ஆகியோர் நேரடியாகவே அந்நிய மூலதனத்தை பாதுகாக்க முதல்வர் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றனர்.

### திமுக அரசும் தொமுசவும்

அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்கா சென்று வந்த முதலமைச்சர் ஸ்டாலின் பன்னாட்டு சாம்சங் நிறுவனத்தின் மனம் கோணாமல் நடந்து கொண்டார். போராடிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது தமிழக காவல்துறை அடக்குமுறை கட்டவிழ்த்து விட்டது. சாம்சங் தொழிலாளர் சங்கத்துக்கு ஆதரவான எந்தவொரு நடவடிக்கைக்கும் அனுமதி கிடைக்கவில்லை. மத்திய தொழிற்சங்க கூட்டுக்குழு அறைகூவல் விடுத்த ஆர்ப்பாட்டத்திற்கு தொழிற்சங்கத் தலைவர்கள் கூடுவதற்கு முன்பாகவே கைது செய்யப்பட்டனர். இடதுசாரி கட்சிகளின் மாநிலச் செயலாளர்கள் கைது, அவர்கள் மீது பொய் வழக்கு, நள்ளிரவில் சாம்சங் தொழிலாளர்கள் வீடுகளுக்கு காவல்துறை சென்று கைது என்று தனது மூலதன விசுவாசத்தை திமுக அரசு காட்டிக்கொண்டது. திமுகவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு தொழிற்சங்க உரிமை, கூட்டுப் பேர உரிமை மற்றும் தொழிற்சாலை ஜனநாயகத்திற்கான போராட்டத்தை எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவு சிறுமைப்படுத்தி பிரச்சாரத்தில் ஈடுபட்டது. தொழில்துறை அமைச்சர் ராஜா, நடுத்தர, சிறு,

குறு தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழிலாளர் துறை அமைச்சர் கணேசன் ஆகியோர் கொண்ட குழுவை முதல்வர் ஸ்டாலின் அமைத்தார். இந்தக் குழு போராட்டத்தில் ஈடுபட்ட சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்காமலேயே சாம்சங்கிற்கு விசுவாசமான தொழிலாளர்களை வைத்துப் பேசி ஒப்பந்தம் ஏற்கப்பட்டதாகக் கூறி தொழிலாளர்கள் வேலைக்கு திரும்புவார்கள் என தன்னிச்சையாக அறிவித்தது. இதற்கெதிராக ''சட்டமா, சாம்சங் கொட்டமா'' எனக் கேட்டு தமிழ்நாடு முழுவதும் இயக்கங்கள் நடத்தப்பட்டன. தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி, அந்நிய நாட்டுக் கம்பெனியான சாம்சங்கிற்கென தனி விதிமுறைகள் இருக்கும் அல்லவா? என்றார். இவர்கள் இவர்களுக்கு வாக்களித்த தொழிலாளர்களுக்காக இருக்கிறார்களா? நம் நாட்டுச் சட்டத்தை மதிக்காத, லாப வெறிபிடித்த சாம்சங் போன்ற நிர்வாகங்களுக்காக இருக்கிறார்களா?

அகில இந்திய அளவில் அனைத்து தொழிற்சங்கக் கூட்டுக் குழுவில் உறுப்பினராக இருக்கும் திமுகவின் தொமுச இந்தப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் ஆதரவு அறிக்கையில் கையெழுத்திட்டு விட்டு பின்னர், தன்னை போராட்டத்தில் இருந்து முழுமையாகத் துண்டித்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல், சாம்சங் பிரச்சனையை அளவுக்கு மீறி ஊதிப் பெரிதுபடுத்த வேண்டாம் என்று சிஐடியுக்கு ஆலோசனை வேறு வழங்கியது. தொழிற்சங்க இயக்கம் எந்த அரசாங்கத்தின் ஊது குழலாகவும் செயல்படக்கூடாது. அப்படி செயல்பட்டால் அந்த சங்கம் மதிப்பிழந்து போகும்.

**நீதிமன்றத் தலையீடு**

அமைதியான முறையில் போராடும் தொழிலாளர்களை காவல்துறை கைது செய்யக்கூடாது என்று நீதிமன்றம் கூறிய பின்பு, சிறையில் அடைக்கப்பட்ட தொழிலாளர்களும் கைது செய்யப்பட்ட தொழிலாளர்களும் விடுதலை செய்யப்பட்டனர். சங்கப் பதிவுக்கான வழக்கு இப்போது உயர்நீதிமன்றத்தில் உள்ளது.

**முடிவுக்கு வந்த 37 நாட்கள் வேலை நிறுத்தம்**

தமிழகத் தொழிலாளர்கள், எஸ்கேஎம் உள்ளிட்ட விவசாய அமைப்புகள், வெகுஜன அமைப்புகள், கம்யூனிஸ்ட்கள் மற்றும் தோழமைக் கட்சிகள், சில எதிர்க்கட்சிகள், கொரியாவில் செயல்படும் சாம்சங் ஊழியர் சங்கம் ஆகியவை பன்னாட்டு கார்ப்பரேட் கம்பெனியின், தமிழக அரசின் ஒடுக்கு முறைக்கு எதிராக தொழிலாளர்களுக்கு ஆதரவாக நின்று உதவிகள் செய்தார்கள். நிதி வழங்கினார்கள்.

அமைச்சர்கள் குழுவில் பொதுப்பணித்துறை அமைச்சர் வேலு இணைந்து கொண்டார். அக்டோபர் 15 அன்று தொழிலாளர் துறை அதிகாரிகள் முன்பு நடந்த பேச்சுவார்த்தைக்குப் பின்னர் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட காரணத்துக்காக மட்டும் (?) தொழிலாளர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கை இருக்காது, தொழிலாளர்கள் நிர்வாகத்துக்கு முழு ஒத்துழைப்புத் தர வேண்டும். தொழிற்சங்கத்தின் கோரிக்கைப் பட்டியல் மீது நிர்வாகம் பதிலுரை தாக்கல் செய்யும் என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். கடும் அடக்குமுறைகளை சந்தித்த போதும் தொழிலாளர்கள் 37 நாட்கள் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அரசியல் அணி சேர்க்கை உள்ளிட்ட பல்வேறு விசயங்களை கணக்கில் கொண்டு சிஐடியு சங்கம் முதல்வரின் தலையீட்டை மெச்சுவது தெரிகிறது. அடக்கு முறையின் போது கூட எல்லா விசயங்களும் முதலமைச்சருக்குத் தெரிந்துதான் நடக்கிறதா? என்று கேள்வி எழுப்பியது. தொழில்துறை மூலதனத்தையும் தொழிலாளர் உரிமைகளையும் இரண்டு கண்களாக பாவித்து முதலமைச்சர் ஸ்டாலின் இரு தரப்பினரையும் இணங்க வைத்து போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்தது பற்றி பெருமைப்பட முரசொலி தலையங்கம் எழுதுகிறது. ஆனால், உண்மையிலேயே ஒரு கண்ணில் வெண்ணையும் ஒரு கண்ணில் சுண்ணாம்பும் வைக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை. இருப்பினும், சர்வதேச அளவில் ஊழல், அராஜகத்திற்குப் பெயர் பெற்ற சாம்சங் நிறுவனம் சுங்குவார் சத்திரம் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு தொழிலாளர் துறை அதிகாரிகள் முன்பு பதிலுரை கொடுக்க வேண்டும் என்கிற நிலையே சாம்சங் தொழிலாளர் சங்கத்தை அங்கீகரிப்பதற்கான முதல் படியாகும். சங்க உரிமை தொடர்பான வழக்கு வந்தபோது அரசு மேலும் கால அவகாசம் கேட்டதிலிருந்து இது தெளிவாகிறது.

தொழிலாளர் உரிமைக்கான போராட்டத்தில் அடக்குமுறை, சிறைக் கொடுமைகள், இரட்டை ஆயுள் தண்டனையை சந்தித்தனர் பிரிக்கால் தொழிலாளர்கள் அன்று. சில ஆண்டுகளுக்குப் பின்னர் சாம்சங் தொழிலாளர்கள் அந்த போராட்டச் செங்கொடியை இன்று உயர்த்திப் பிடித்துள்ளார்கள். சங்கம் அமைக்கும் உரிமை அடிப்படை உரிமை. தமிழக அரசு காலம் தாழ்த்தாமல் தொழிற்சங்க அங்கீகார சட்டத்தை இயற்ற வேண்டும். தொழிற்சங்க உரிமை, கூட்டுப்பேர உரிமைக்கான இந்திய அரசு ஏற்றுக்கொண்ட சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தீர்மானங்கள் 87 மற்றும் 98 ஐ அமல்படுத்துவதை ஆட்சியாளர்கள் உறுதி செய்ய வேண்டும். பன்னாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தும் போது மத்திய, மாநில ஆட்சியாளர்கள் தொழிற்சங்க உரிமை, வேலை நேரம் உள்ளிட்ட நாட்டின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதை உறுதி செய்ய வேண்டும். ஆட்சியாளர்கள் சொல்லுகிற தொழில் அமைதி முதலாளிகளின் மூலதனத்தை பாதுகாப்பதற்கான அமைதி.

கார்ப்பரேட் முதலாளிகளின் லாப வெறி, மூலதனத் தாக்குதல் இருக்கும் வரை உழைக்கும் தொழிலாளர்களின் உரிமைக்கான போராட்ட மும் தொடர்ந்து இருந்து கொண்டு தான் இருக்கும். ❐

# சிந்துவெளி நாகரிகம்; ஆரியர் நாகரிகம் இல்லை

சந்திரமோகன்

அகழாய்வுகள் வழியாக, சிந்துவெளி பகுதியில் நகரங்கள் - நாகரிகம் கண்டறியப்பட்டதை அறிவித்த நூறாண்டு நிறைவடைந்தது. அதாவது, ஹரப்பா, மொஹஞ்சதரோ ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் முடிவுகள், தி இல்லஸ்ட்ரேட்டட் இலண்டன் நியூஸ் - *The Illustrated London News* பத்திரிக்கையில், கடந்த 1924 ம் ஆண்டு செப்டம்பர் 20ம் தேதி வெளியிடப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

சிந்துவெளி நாகரிகம் - *Indus civilization* என அறியப்படுவது, சிந்து நதிக் கரையில் உருவான ஆற்றங்கரை நாகரிகம் அல்ல! ஹரப்பா, மொஹஞ்சதரோ ஆகிய இடங்களில் கண்டறியப்பட்ட நகர நாகரிகம் ஆகும். மானுட சமூகம் முதல் கட்டத்தில் கட்டமைத்த அனைத்து நாகரிகங்களும் (தொன்மையான தமிழர் நாகரிகம் உட்பட), வணிகர்கள் கட்டமைத்த நகர நாகரிகங்களே! இத்தகைய நகர நாகரிகங்களில், வணிகர்கள், பல்வேறு தொழிற்சாதிகள், படைவீரர்கள் என வர்க்கங்கள் இருந்தன.

அய்ரோப்பாவில் ஆரிய இனப்பெருமை மற்றும் இனவெறி கோலோச்சிய போது, பிரிட்டிஷ் காலனிய ஆட்சியில், இந்தியாவிலும் சில மேற்கத்திய அறிஞர்கள் மற்றும் இந்திய பிராமணர்கள் ஆரிய மேன்மை பாராட்டினர்; ஆரியர்கள் - உலகிற்கு நாகரிகம் வழங்கியவர்களாக சித்தரிக்கப்பட்டனர். 'வேதநாகரிகமே முதல் இந்திய நாகரிகம்' என்ற புனைகதைகளும் உருவாக்கப்பட்டன. இத்தகைய காலகட்டத்தில், பத்தாண்டுகளாக இந்தியாவில் அகழாய்வுப் பணிகளை மேற்கொண்ட சர் ஜான் மார்ஷல் என்ற பிரிட்டிஷ் அகழாய்வு நிபுணர், அன்றைய இந்திய தொல்லியல் கழகத்தின் தலைமை இயக்குநர், 1924, செப்டம்பர் 20ம் தேதியில், 'இந்தியாவின் முதல் நகரமயமாக்கம் சிந்து சமவெளி நாகரிகம், அந்தப் பண்பாடு ஆரியர் நுழைவுக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் நிலவியது' என்பதை முதன்முதலாக அறிவித்தார். இந்த அறிவிப்பு, ஆரிய இனவெறி புனைவு கருதுகோளுக்கு முடிவு கட்டியது. மேலும் கூடுதலாக, 'சிந்துவெளி நாகரிகம் திராவிடர் நாகரிகம் ஆகவும் இருக்கலாம்' என அவர் அறிவித்தது, திராவிட நாகரிகம் கருதுகோளுக்கு வலுசேர்த்தது.

### சிந்துவெளி நாகரிகம் வேதகால ஆரியர் நாகரிகமா; தமிழர் - திராவிட நாகரிகமா?

"சிந்துவெளி நாகரிகம், முதல் இந்திய நாகரிகம் - வேதகால ஆரியர் நாகரிகம்- சரஸ்வதி நதி நாகரிகம்" என்ற கருதுகோள் பல்லாண்டுகளாக சங்கப் பரிவாரங்களால் கட்டமைக்கப்படுகிறது. சிந்துவெளி நாகரிகத்தை அவர்கள், சிந்து - சரஸ்வதி நாகரிகம் எனத் திரும்பத்திரும்ப கூறி வருகின்றனர். ஹரப்பா அருகில் சரஸ்வதி நதி இருந்ததாக ஒரு புனைவை ஆர்எஸ்எஸ் தொடர்ந்து கட்டமைத்து வருகிறது; இத்திசையில் கட்டுரைகள், வரலாறுகள் எழுதப்படுகின்றன. இல்லாத சரஸ்வதி நதியை கண்டுபிடிக்க பாஜக அரசுகளால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆய்வுகளும் நடைபெறுகின்றன.

மற்றொரு புறம், சிந்துவெளி நாகரிகப் பகுதிகளில் நிலவும் ஊர் பெயர்கள் தமிழ்நாட்டுடன் ஒப்புமை உள்ளதாகக் கருதும் தமிழ் ஆர்வலர்கள், கோட்பாட்டாளர்கள், 'தமிழர் நாகரிகம் சிந்துவெளி நாகரிகம் தான்' என வாதிடுகின்றனர். சிந்துவெளி நாகரிகம் அறிவிக்கப்பட்டு நூறாண்டு நிறைவான பின்னரும் இந்த விவாதங்கள் தொடர்கிறது.

### சிந்துவெளி நாகரிகத்தை வேதகால ஆரியர்கள் உருவாக்கவில்லை :-

'ஆரியர்கள் அல்லது பிராமணர்கள், இந்தியாவின் பூர்வீக மக்கள், அவர்கள் தான் சிந்துவெளி நாகரிகத்தை உருவாக்கியவர்கள், அவர்கள் தமிழர்களுக்கும் மூத்தவர்கள்' என்ற கட்டுக்கதைகளை ஆரிய - பிராமணிய சார்பு வரலாற்று எழுத்தாளர்கள் கட்டமைக்கிறார்கள்.

### உண்மை என்ன?

1) சிந்துவெளி நாகரிகம், ஆரியர் வருகைக்கு முன்பே நிலவியதாகும். சிந்துவெளி நாகரிகம் அழிந்த பிறகு அல்லது அழியும் கட்டத்தில்தான், வடமேற்கிலிருந்து ஆரியர்கள் கால்நடை மேய்ச்சல் குடிகளாக இந்தியாவிற்குள் வந்தனர். ஆரிய பிராமணர்களுக்கு அல்லது வட இந்திய உயர்சாதியினருக்கு உரிய மரபணு *DNA R1a1* வும், இதனுடன் உறவுடைய மரபணு தொகுப்புகளும் கிமு 2000 காலத்தில் தான் இந்தியாவிற்குள் நுழைந்தது, பரவியது என மரபணு ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. ஆனால், ஆரியர் வருகைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னரே, இந்திய நிலப்பரப்பில் சிந்துவெளி நாகரிகம் சிறப்பாக நிலவியிருந்தது.

2) ஆரிய பிராமணியம் உயர்த்தி பிடிக்கும் வேதகால மக்கள் பயன்படுத்தியதாக குறிப்பிடப்படும் பொருட்கள் எதுவும், இதுவரையில் எந்தவொரு சிந்துவெளி நகரங்களின் ஹரப்பா, மொகஞ்சதாரோ அகழாய்வுகளிலும் கிட்டவில்லை. கிடைத்துள்ள குதிரை எலும்புகள் போன்றவையும் இந்த நகரப்பகுதிகளில் அல்லாமல், புறப்பகுதிகளில்தான்

கிடைத்துள்ளது.

3) சிந்துவெளி நகர வீடுகளில் உள்ள அடுப்புகளுக்கும் ரிக் வேதம் குறிப்பிடுகிற வனத்தில் உருவாக்கப்பட்ட யாக குண்டங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

**ஆரியர்கள் இந்திய நிலப்பரப்புக்கு வெளியிலிருந்து வந்தவர்களே !**

இந்திய வரலாற்று ஆய்வாளர் ரொமிலா தாப்பர் அவர்கள், 'ஆரியர்கள்: சிந்துவெளி - ஹரப்பா நகர நாகரிகத்திற்கு வெளியே இருந்த புறக்குடிகள், கால்நடைகளை மேய்க்க, மேய்ச்சல் நிலங்கள் தேடி அவ்வப்போது இடம்பெயரும் ஒரு நாடோடி கூட்டம்' என விவரிக்கிறார். இத்தகைய கருதுகோளை உறுதி செய்யும் வகையில், பல்வேறு வெளிநாட்டு, இந்திய, தமிழ்நாட்டு வரலாற்று ஆய்வாளர்கள் விரிவாக ஆரியர் வரலாற்றை எழுதியுள்ளனர்.

**ஆரிய இனக்குழுக்கள் சிந்துவெளி நாகரிகத்தை உருவாக்கினார்களா?**



ஆரியர்கள் தான் சிந்துவெளி நாகரிகம் உருவாக்கினார்கள் அல்லது ஆரியர்கள் தான் திராவிட சிந்துவெளி நாகரிகத்தை அழித்தார்கள் என்ற கருதுகோள்கள் பல்லாண்டுகளாக வரலாறு, அரசியல் தளங்களில் விவாதிக்கப்படுகிறது.

பழைய ரஷ்யாவின் ஸ்டெப்பி புல்வெளிதான் ஆரியர்கள் பூர்வீகம் ஆகும். இந்தியாவுக்குள் பரவிய ஆரியர்கள் நகர நாகரிகம் எதையும் உருவாக்கவில்லை; கால்நடை வளர்ப்பு குடிகளான ஆரியர்கள் விவசாய நாகரிகம் சார்ந்த ஒருசில ஜனபதங்களின் ஆட்சியை மட்டுமே உருவாக்கினார்கள் .

தமிழ் வரலாற்று ஆய்வாளர் த.தங்கவேல் அவர்கள் ஆரியர்கள் வருகை பற்றியும் சிந்துவெளி பண்பாட்டுடன் தமிழர் நாகரிகத்துக்கு உள்ள வேறுபாடுகள் பற்றியும், 'தமிழரைத் தேடி' என்ற நூலில் விவரிப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

"கிழக்கு ஐரோப்பாவின் 'பாண்டிக்' புல்வெளி'ப் பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்த ஆரிய இனக்குழுக்கள் கி.மு. 2000 .. 1500 காலகட்டத்தில் பல வழிகளில் இந்தியாவிற்குள் குடியேறினர். மத்திய ஆசியா வழியாக நடைபெற்ற இக்குடியேற்றத்தையும் அதன் காலகட்டத்தையும் மரபணு ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

கி.மு. 1700 லிருந்து சிந்துவெளி நகரங்களுக்கும் சுமேரியா, எகிப்து, கிழக்கு மத்தியதரைக் கடலோர வணிக அரசுகள் போன்ற அரசுகளுக்கும் நடைபெற்று வந்த வணிக நடவடிக்கைகள் முடிவிற்கு வந்திருந்தன. பருவமழை பொய்த்தது மட்டுமல்லாமல் இதே காலகட்டத்தில் மேற்காசிய அரசியலிலும் அதிக மாற்றங்கள் நிகழ்ந்து மெசொப்பொட்டாமிய பகுதியின் பெரும்பாலான அரசுகள் வெள்ளையினக் குடிகளின் ஆளுமையின் கீழ் சென்றது. இத்தகைய அரசியல் மாற்றம் வணிகத்தைப் பாதித்ததும் சிந்துவெளி நகரங்களின் அழிவிற்குக் காரணமாகியிருக்கலாம். இவையல்லாமல் பஞ்சம் பிழைப்பதற்காக இடம்பெயர்ந்த ஆரிய இனக்குழுக்கள், சிந்துவெளி நகரங்களை அடுத்து அதிக எண்ணிக்கையில் குடியேறியது சிந்துவெளி நகரங்களின் மாந்தர்கள் இப்பகுதியில் தொடர்ந்து வாழமுடியாத நெருக்கடியை ஏற்படுத்தியது எனலாம்.

இத்தகைய நெருக்கடிச் சூழலில் சிந்துவெளி நகரங்களைக் காலிசெய்துவிட்ட குடிகள் என்ன ஆனார்கள் என்ற வினா உள்ளது. ஊர்ப் பெயர் ஒப்புமைகளைக் கூறும் சில ஆய்வாளர்கள் சிந்துவெளி நாகரிகத்தின் அழிவிற்குப் பின் அப்பண்பாட்டு மக்கள் தென்னகம் குடியேறிவிட்டனர் என்று கருதுகின்றனர். தமிழ்நாட்டில் கிடைத்த பெருங்கற்காலப் பானை ஓடுகளில் காணப்படும் குறியீடுகள் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் குறியீடுகளுடன் ஒப்புமையுடைதாக இருப்பதும் இக்கருத்தாக்கத்திற்குத் துணையாக உள்ளது. அண்மைக் காலங்களில் நடைபெற்ற மரபணு ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு சிந்துவெளி மக்கள் கிழக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் குடிபெயர்ந்துள்ளதாக 'டோனி ஜோசப்' என்ற ஆய்வாளர் குறிப்பிடுகிறார். தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்ற 'இருளர்' பழங்குடியினரின் மரபணுக்கூறுகள் சிந்துவெளிப் பண்பாட்டு மக்களின் மரபணுக்கூறுடன் அதிக ஒப்புமையுடன் உள்ளதை மரபணு ஆய்வுகள் உறுதிசெய்துள்ளன. மேலே விவாதித்த தரவுகளை சுட்டிக் காட்டி, சிந்துவெளி மக்கள் தென்னகம் குடியேறியிருக்கலாம் என இந்த ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**தொடரும்...**



# கோவை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்

கோவை மாநகராட்சியில் பணியாற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், 1) கோவை மாவட்ட ஆட்சியர் 22.07.2024 தேதி அறிவித்த தூய்மைப் பணியாளர்களுக்கான குறைந்த பட்ச கூலி ரூ770ம், ஓட்டுனர்களுக்கு ரூ.803ம் உடனே வழங்கப்படவேண்டும், 2) 2023-2024 க்கான போனஸ் குறைந்தபட்சமாக 8.33%ம், 11.67 விழுக்காடு கருணைத்தொகையும் சேர்த்து 20 % வழங்கவேண்டும், 3)தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியைச் செலுத்தி முறையாக ரசீது வழங்கப்பட வேண்டும். 4)இஎஸ்ஐ அடையாள அட்டை வழங்கப்படவேண்டும், 5) கோவை மாநகராட்சியில் ஒப்பந்த முறையை ரத்து செய்து விட்டு மாநகராட்சியே நேரடியாக தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கவேண்டும் உள்ளிட்ட 5 அம்ச கோரிக்கைகளை அமலபடுத்தக் கோரி மாநகராட்சி ஆணையருக்கு ஏற்கனவே மனு அளித்திருந்தார்கள். ஆனால் அதன் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதால் ஏஐசிசிடியு தமிழ்நாடு ஜனநாயக பொது தொழிலாளர் சங்கம், தூய்மைப் பணியாளர்கள் நலச் சங்கம், தமிழ்ப்புலிகள் தூய்மைப் பணியாளர்கள் சங்கம் உள்ளிட்ட அதிகாரக் குரல் கூட்டமைப்பு சார்பில் 16.10.2024 அன்று மாலையிலிருந்து மாநகராட்சி தலைமை அலுவலக வளாகத்துக்குள் உள்ளிருப்பு போராட்டத்தை தொழிலாளர்கள் நடத்தினார்கள், போராட்டமானது 18.10.2024 வரை தொடர்ந்தது. தொழிலாளர்களை கைது செய்து சமூக நலக் கூடத்தில் அடைத்து வைத்தார்கள். அதேவேளை மாநகராட்சி ஆணையர் தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்பேச்சுவார்த்தையில் ஒப்பந்தக்காரர் கலந்து கொண்டு 2000 ரூபாய் தருவதாகக் கூறினார். தொழிலாளர் தரப்பில் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர் முதற்கட்டமாக ரூபாய் 4000 அன்பளிப்பாக தரப்படும் என்றார்கள். தொழிலாளர் தரப்பில் 8.33% அல்லது ஒரு மாதச் சம்பளம் மற்றும் கருணை தொகை 11.67% கண்டிப்பாகத் தரப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. 21ம் தேதி மீண்டும் அது பற்றிபேசலாம்என்று முடிவு எடுக்கப்பட்டது. கடந்த டிசம்பரில் இருந்து கட்டப்படாமல் உள்ள தொழிலாளர்களின் பி.எப் பணம் உடனடியாகக் கட்டப்படும் என்றும் ஒப்பந்த முறையை மாற்றி மாநகராட்சியின் தொழிலாளர்களாக ஆக்குவதற்கும் மாநகராட்சியே நேரடியாகச் சம்பளம் வழங்கிடவும் கோவை மாநகராட்சியில் பணியாற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், கோவை மாவட்ட ஆட்சியர் 22.07.2024 தேதி அறிவித்த சம்பளம் தொடர்பாக தீபாவளிக்குப் பின்னர் பேசி முடிவு செய்வது எனவும் உத்தரவாதம் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் போராட்டம் தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட்டு 19.10.2024 அன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். போராட்டத்தை தோழர்கள் சந்தனக்குமார், சாமுவேல், மகேஷ் வள்ளி ஆகியோர் தலைமை தாங்கி நடத்தினார்கள். போராட்டத்தை வாழ்த்தி இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் தோழர் பாலசுப்பிரமணியன், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாநிலக்குழு உறுப்பினர் தோழர் பிலோமினா, வழக்கறிஞர் லூயிஸ் உரையாற்றினார்கள்.

அதன் பின்னர் 21.10.2024 அன்று மூன்றாவது முறையாக ஆணையர் அவர்கள் தலைமையில் பேச்சுவார்த்தை நடந்தது. மாநகராட்சி ஆணையர், போராட்டம் நடக்காமல் இருக்கவேண்டும் என்பதை கருத்தில் கொண்டு தொழிலாளர்களுக்கு பல விசயங்களை நான் செய்து தருகிறேன் என்று வாக்குறுதி அளித்து விட்டு, ஒப்பந்ததாரர் பிரதிநிதியை பார்த்து போனஸ் சம்பந்தமாக என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டார், ஒப்பந்ததாரர் தரப்பில் இறுதியாக குறைந்த பட்ச போனஸாக ரூ3500ம், அதிக பட்சமாக ரூ 4700 ம் வழங்குவதாகவும் அக்டோபர் மாதத்திற்கான சம்பளத்தை இந்த மாதம் 30 ம்தேதியே தொழிலாளர்களுடைய வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் என்று கூறினார். தொழிலாளர் தரப்பில் கூட்டமைப்பு சார்பாக அன்பளிப்பு தொகையை ஏற்றுக் கொள்ள மாட்டோம், சட்டப்படியான குறைந்த பட்ச போனஸ் 8.33 சதம் அல்லது ஒருமாத சம்பளம் போனஸாக வழங்கவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தப்பட்டது. காத்திருப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளாத சங்கங்கள், இதன்மீது கருத்து சொல்லாமல் வேறு விசயங்களை பேசி, பேச்சுவார்த்தையின் நோக்கத்தை திசைதிருப்பினார்கள், அதை பயன்படுத்திக்கொண்ட ஆணையர் பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு எழுந்து சென்றுவிட்டார். ஆணையர் அலுவலகத்துக்கு வெளியே காத்திருந்த தொழிலாளர்களிடம் நடந்தது பற்றி கூறப்பட்டது. தீபாவளிக்குப் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. ❑

**– பாலசுப்பிரமணியன்**

# நகர்மயமாக்கம் – தலித் – பாட்டாளி சாதி ஒழிப்பு – மார்க்சியம்.

இராமச்சந்திரன்

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

விவசாயிகள் சங்கத்தை ஆதிதிராவிடர்களின் சாதிச் சங்கம் என்று ஆரம்பத்தில் நினைத்துக் கொண்டிருந்தவர்கள், அது தவறு எனப் புரிந்து கொண்ட பின்னர் எல்லாச் சாதிய பின்னணிகளைக் கொண்ட கூலி, ஏழை விவசாயிகளும் செங்கொடி விவசாய சங்கத்தில் தங்களை இணைத்துக்கொண்டு பண்ணை முதலாளிகளின் நிலவுடைமை, உழைப்புச் சுரண்டல், சமூக ஒடுக்குமுறை, அதிகாரத்திற்கு எதிராக ஒன்றுபட்டுப் போராடினர்; எல்லாவகையான இன்னல்களையும் எதிர்கொண்டனர்; களத்தில் குருதி சிந்தினர்; உயிரைத் தந்தனர்; தோழர்கள் களப்பால் குப்பு, வாட்டாக்குடி இரணியன், ஆம்பலாப்பட்டு ஆறுமுகம், சாம்பவான் ஓடை சிவராமன், பூந்தாழங்குடி பக்கிரி, சிக்கல் பக்கிரி, கீழக்கரை ஏ.ஜி. ராமச்சந்திரன், சின்னப்பிள்ளை, மணியம்மை, இவர்களை வழிநடத்திய சீனிவாசராவ், வெண்மணி தியாகிகள் வரையிலும், அதற்குப் பின்னும் அப்பு, பாலன், சந்திரகுமார், சந்திரசேகர், சுப்பு எனத் தொடரும் வரலாறு இதைக் காட்டுகிறது.

**சாதிய துருவச் சேர்க்கையை முன்தள்ளி பலம் பெறும் பாஜக.**

சாதிகள் பற்றி பேசும்போது நால்வருணங்களைக் குறிப்பிட்டாலும் (இந்த நால்வருணங்களுக்குள் தலித்துகள் இல்லை), இன்று சாதிகள் அடிப்படையில் உயர்சாதிகள், பிற்படுத்தப்பட்ட சாதிகள், பட்டியலினச் சாதிகள் என மூன்று முக்கிய தொகுப்புகளாக இருக்கின்றன. உயர்சாதிகளுக்கும், பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கும் இடையேயான முரண் மண்டல் குழு பரிந்துரையின்போது பட்டவர்த்தனமாக வெளிவந்தது. தலித்துகள் உயர்சாதியினருக்கு எதிராக, மண்டல் குழுவுக்கு ஆதரவாக நின்றனர். ஆனால், தலித்துகள் தங்கள் உரிமைகளை, விருப்பங்களைச் சாதிக்க முனைந்தபோது களத்தில் பிற்படுத்தப்பட்ட சாதிகளின் மூர்க்கத்தனமான தாக்குதலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களிலும், வட மாவட்டங்களிலும் என்ன நடந்தது என்பதைப் பார்த்தோம். இன்றும் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். துவக்கத்தில் ஒன்றுபட்டிருந்த விடுதலைச் சிறுத்தைகளும், பாமகவும் பின்னாளில் பிரிந்துசெல்வதற்கு இதுதான் அடிப்படையாக இருந்தது. உ.பி.யில் மாயாவதியும், முலாயமும், பீகாரில் லாலுவும், பஸ்வானும் இவ்வாறுதான் பிரிந்து சென்றனர். இந்தச் சூழலிலிருந்து, "பிற்படுத்தப்பட்டோர், உயர்சாதியினரோடு ஒன்று சேர்ந்து தலித் அறுதியிடலை தடுத்துநிறுத்துவது, தலித்துகள் உயர்சாதியினரோடு ஒன்றுசேர்ந்து பிற்படுத்தப்பட்டோரின் அரசியல் செல்வாக்கை குறைப்பது" என்பதாக ஒரு புதிய சந்தர்ப்பவாத அரசியல் போக்கு எழுந்தது. பாஜகவின் உயர்சாதி ஆதிக்கத்தை / வர்க்கச் சுரண்டலை உறுதி செய்யும் சமூகப் பொறியியலுக்கு இது ஒத்திசைவாக இருந்தது. தமிழ்நாட்டில் பாஜக-பாமக கூட்டணியும், பீகாரில் பாஜக-பாஸ்வான் கூட்டணியும் இதற்கான எடுத்துக்காட்டுகள்.

**வர்க்கப் போராட்டத்தை பொருளாதார / நாடாளுமன்ற அரங்கிற்குள் குறுக்கிவிட முடியாது.**

அரசமைப்புச் சட்டம் பொதுவாக தீண்டாமையைத் தடை செய்திருந்தாலும், ஜனநாயக உரிமைகள் வழங்கினாலும், சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்று சொன்னாலும், பிற்போக்கு சாதியக் கட்டமைப்போடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கிற அதிகார வர்க்கத்தைக் கொண்டுள்ள, முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ அரசும் சாதிய அமைப்பை பாதுகாக்கிறது. தலித்துகளின் / தொழிலாளர்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை நசுக்குவதில் நிலப்பிரபுத்துவ ஆதிக்க சாதிவெறி/ முதலாளித்துவ சக்திகளின் வன்முறையோடு, அரசு - நாடாளுமன்ற அமைப்புகள், நிர்வாகத்துறை, நீதித்துறை, காவல்துறை, ராணுவம் - வன்முறையும் சேர்ந்துகொள்கிறது.

வலதுசாரி அரசாங்கத்தை விட்டுத் தள்ளுங்கள் வெகுமக்கள் போராட்டங்களிலிருந்து, இயக்கங்களிலிருந்து வளர்ந்து, மாநிலத்தில் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த சமூகநீதி பேசும் அரசாங்கமோ, தலித் தலைமையிலான பகுஜன் அரசாங்கமோ, ஏன், இடதுமுன்னணி அரசாங்கமோ, எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, மக்கள் தங்கள் உரிமைகளுக்கான போராட்டத்தில் எழும்போது மக்கள் போராட்டத்தின் ஓர் உறுப்பாக, மக்கள் போராட்டத்தை மேலும் விரிவாகவும், மேலும் உயர்ந்த மட்டத்திற்கும் எடுத்துச் சென்று, கீழே வேர்க்கால் மட்டம் வரை பரவியுள்ள முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ அதிகாரத்தை, மேலே ஒன்றிய அரசாங்கத்தை எதிர்கொண்டு, மக்கள் கோரிக்கையை, முற்போக்கு ஜனநாயக

சீர்திருத்தங்களை நிறைவேற்றுவது (மாநில ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்வது தொடர்பான இகக(மாலெ)வின் பொதுத்திட்டம் இதைத்தான் பேசுகிறது) என்பதற்குப் பதிலாக, முதலாளித்துவ- நிலப்பிரபுத்துவ அரசின் ஓர் உறுப்பாக மாறி விடுகிறது; அல்லது உள்வாங்கிக்கொள்ளப்படுகிறது.

மற்ற அரசாங்கங்களால், சில மேலோட்ட மான சீர்திருத்தங்கள் தவிர்த்து, நிலவும் சமூக, அரசுக் கட்டமைப்பைத் தாண்டிச் செல்ல முடியாது என்பது புரிந்துகொள்ளக்கூடியதுதான். ஆனால் ஓர் இடது முன்னணி அரசாங்கம்? மாநில அரசாங்கத்திற்கு கூடுதல் அதிகாரம் இல்லை என்பதல்ல முதன்மையான பிரச்சனை, மக்கள் போராட்டத்தின் ஓர் உறுப்பாக இல்லை; வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல தயாராக இல்லை என்பதுதான் பிரச்சனை.

பொருளாதாரப் போராட்டங்களுக்கு தொழிற்சங்கங்கள், சாதியாதிக்க எதிர்ப்புக்கு தீண்டாமை ஒழிப்பு முன்னணி, உடனடி நிவாரணத்திற்கு மாநில அரசாங்கம் என்பது வர்க்கப் போராட்டங்களை பொருளாதார அரங்கிற்குள் குறுக்குவதன் வெளிப்பாடுதான்.

**வர்க்கம் – சாதி; ஒற்றுமையும் – முரணும்:**

சாதிக்குள் பல வர்க்கங்கள் இருக்கின்றன; வர்க்க உறவுகள் சாதிய வடிவத்தில் வெளிப்படுகின்றன. ஆனால் வர்க்கமும் சாதியும் முறையே அடிக்கட்டுமானத்திலும், மேல் கட்டுமானத்திலும் - உற்பத்தி முறையிலும், விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதிலும் - வேர் கொண்டுள்ள திட்டவட்டமாக வேறுபட்டுள்ள இரண்டு வகையினங்களாக இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட (முதலாளித்துவத்துக்கு முந்தைய) உற்பத்தி முறையில் அடிக்கட்டுமானமும் மேல்கட்டுமானமும் ஒத்திசைவாக இருக்கும்போது வர்க்கமும், சாதியும் ஒத்திசைவாக இருக்கின்றன; எனவே வர்க்கமும் சாதியும் ஒன்று போலத் தோன்றுகின்றன. உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியின் காரணமாக உற்பத்தி முறையில் மாறுதல் ஏற்படுகிறபோது (முதலாளித்துவ உற்பத்தி முறை தொடங்குகிறபோது) இந்த ஒத்திசைவு உடைகிறது. வர்க்கமும், சாதியும் அடிக்கட்டுமானமும், மேல் கட்டுமானமும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. ஒன்று மற்றொன்றை வரையறுக்க முயற்சிக்கிறது. இந்த இரண்டாம் கட்டத்தில் வர்க்க-சாதி உறவு சிக்கலானதாகின்றது. முதலாளித்துவத்தின் முழு வளர்ச்சிக் கட்டத்தில் உழைப்புப் பிரிவினைக்கான வடிவம் என்கிற வகையில் சாதி ஒழிக்கப்படுகிறது; வர்க்கம் விநியோக முறையையும் நேரடியாகத் தீர்மானிக்கிறது. வர்க்கப் போராட்டம் வெளிப்டையாகவும், நேரடியாகவும் கூர்மை பெறுகிறது.

**வர்க்க ஒற்றுமை: ஏற்பும்; மறுப்பும்.**

வர்க்க அடிப்படையிலான ஒற்றுமை பற்றி பேசும்போது வழக்கமாக ஓர் ஆட்சே பணை எழுப்பப்படுகிறது: பல்வேறு சாதிப் பின்னணிகளைக் கொண்ட தொழிலாளர்கள் ஓரிடத்தில் ஒன்றுசேர்ந்து பணிபுரிந்தாலும், ஒரே பணியில் ஈடுபட்டாலும், வீடு திரும்பும்போது ஒருவர் ஊருக்கும், மற்றொருவர் சேரிக்கும் செல்கிறார்; இருவரும் சேர்ந்து ஓரிடத்தில் வாழ முடியாதென்றால் வர்க்க ஒற்றுமை எவ்வாறு சாத்தியம்? என்று.

(அன்றைய தஞ்சை) இன்றைய நாகை மாவட்டம், மணலூரில் நிலப்பிரபுத்துவச் சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் எதிராக சிபிஐ(எம் எல்) நடத்திய போராட்டத்தில் நிலப்பிரபுத்துவ சக்திகள் நடத்திய தாக்குதலில் தலித்துகள், வன்னியர்கள், கள்ளர்கள் எனப் பல்வேறு சாதியப் பின்னணி கொண்ட தோழர்கள் ரத்தம் சிந்தினர்; உயிரிழந்தனர். கொலைகாரர்களும் வன்னியர்கள், கள்ளர்கள், தலித்துகள் என அதே சாதியப் பின்னணியைக் கொண்டிருந்தார்கள். சாதி அல்ல, வர்க்க ஒற்றுமையே தீர்மானகரமானதாக இருந்தது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு மட்டுமே.

இரண்டாவதாக, நகரங்களில் அமைப்பாக்கப் பட்ட தொழிலாளர், அரசு ஊழியருக்கான குடியிருப்புகள் - தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர், உயர்சாதியினர் சேர்ந்து வாழும் - பொதுக் குடியிருப்புகளாகத்தான் உருவாகின்றன. சமூகரீதியில் அவர்கள் ஏற்றத்தாழ்வான பின்னணியிலிருந்து வந்திருந்தாலும், அவர்கள் மேற்கொள்ளும் வேலை வர்க்கரீதியில் அவர்களை ஒரே படித்தரம் கொண்டவர்களாக மாற்றியிருக்கிறது. பணியிடத்தில் சேர்ந்து வேலை செய்வதைப் போலவே, குடியிருப்பிலும் சேர்ந்துதான் வாழ்கிறார்கள். இவைகள் இன்று விதிவிலக்குகளாகத் தோன்றலாம். ஆனால் ஒரு நவீன சமூக அமைப்பின் அடையாளம் இது. இந்தப் போக்கு பலம் பெறுவது என்பது அவர்களின் வர்க்க உணர்வு, வர்க்க ஒற்றுமை, குறிப்பாக கிராமப்புர தொழிலாளர், நகர்ப்புர அமைப்புசாரா தொழிலாளருடனான ஒற்றுமை, வர்க்கப் போராட்ட வளர்ச்சியோடு தொடர்புடையது. சாதி ஆணவப் படுகொலைகளுக்கு இடையே, சாதி மறுப்பு இணையர்களுக்கு இன்றும் தொழில் வளர்ச்சியடைந்த நகரங்கள்தான் ஓரளவுக்கு நம்பிக்கையும், துணிவும், புகலிடமும் அளிக்கின்றன.

எனினும், பழமைவாத வழியிலான இந்திய முதலாளித்துவத்தின் வளர்ச்சி வர்க்கங்களாக பகுபடும் இந்த இயக்கப் போக்கை, ஜனநாயகப் போக்கை மந்தப்படுத்துகிறது. ஒரு ஜனநாயக புரட்சியால் மட்டுமே இந்த இயக்கப் போக்கை மந்தப்படுத்தும் எல்லாத் தடைகளையும் உடைத்தெறிய முடியும்.

**சாதிய துருவச் சேர்க்கையை பின்னுக்குத் தள்ளும் வர்க்கப் போராட்டமும்; சமூக மாற்றமும்.**

வர்க்கப் போராட்டம் ஏதோ ஒரு தளத்திலிருந்து - சமூக/பொருளாதார/அரசியல் தளத்திலிருந்து - துவங்குகிறது. அந்தப் போராட்டத்தை அனைத்துத் தளங்களுக்கும் விரிவுபடுத்துவதும், அனைத்தும் தழுவியதாக மாற்றுவதும் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் வேலையாகும். இவ்வாறாக வர்க்கப் போராட்டம் தாழ்ந்த மட்டத்திலிருந்து, உயர்ந்த மட்டத்திற்கு செல்கிறபோது சாதிய துருவச் சேர்க்கையைப் பின்னுக்குத் தள்ளி, வர்க்கத் துருவச் சேர்க்கையை முன்னுக்குக் கொண்டுவருகிறது. வர்க்கப் போராட்டங்களின் வளர்ச்சி மட்டத்தைப் பொறுத்து, எல்லாச் சாதிய பின்னணிகளைக் கொண்ட தொழிலாளர்களுக்கும், தமது சொந்த வர்க்கத்தினரோடு அவர்கள் கொண்டுள்ள பிணைப்பு படிப்படியாக முன்னிலைக்கு வருகிறது; ஆட்சி அதிகாரம் கோரும் பாட்டாளிகளாக மாறுகிறார்கள்; தாங்கள் பிறந்த சமூகத்தைச் சேர்ந்த இதர வர்க்கத்தினரோடு அவர்கள் கொண்டுள்ள ஐக்கியம், அவர்கள் நட்பு வர்க்கமா? பகை வர்க்கமா? என்பதைப் பொறுத்து தீர்மானிக்கிறார்கள். விவசாய/கிராமப்புர/நகர்புரத் தொழிலாளர் அமைப்பில் ஒருவர் உறுப்பினராக சேர்வதே சாதி மறுப்பை நோக்கிய ஓர் அடிவைப்புதான். ஒரு புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியால் வழிநடத்தப்படும் இது போன்ற அமைப்பால் மட்டுமே சாதி அமைப்பையும், அதற்கு ஆதாரமாக உள்ள நிலவுடைமை முறையையும் ஒழிப்பது என்ற இலக்கை நோக்கி இறுதிவரை பயணப்பட முடியும்.

இவ்வாறாக, வர்க்க ஒற்றுமை, வர்க்கப் போராட்டம் என்ற அடிப்படையான அடித்தளத்தின் மீது, பாரம்பரியமான பார்ப்பனிய மேலாதிக்கத்திற்கு எதிராக, ஒரு புதிய தலித், பிற்படுத்தப்பட்டோர் போராட்டக் கூட்டணி உருவாகிறது. இந்தப் போராட்டக் கூட்டணி உயர்சாதிகளைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள், பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த குலக்குகளை மட்டுமல்ல, தலித் மேட்டுக்குடியினரையும் கூட இலக்காகக் கொள்ளும் அதே சமயம் உயர் சாதிகளைச் சேர்ந்த ஏழைகளையும், அறிவொளி பெற்ற பிரிவினரையும் கூட தன்னுள் இணைத்துக்கொள்கிறது.

தொழிலாளர் - விவசாயிகள் கூட்டை அடிப்படையாகக் கொண்டுள்ள இந்தக் கூட்டணியால்தான் முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ ஆட்சியதிகாரத்தை வீழ்த்தி, ஆட்சியதிகாரத்தை தனது கையில் எடுத்துக்கொள்ள முடியும்; முற்றூடான நிலச்சீர்திருத்தத்தின் அல்லது நிலங்களை தேசியமயமாக்குவதன் வழியே, விவசாயத்தில் நிலப்பிரபுத்துவ தளைகளிலிருந்து முற்றிலும் விடுபட்ட, சுதந்திரமான, ஆனால் சோசலிசத் திட்டமிடலின், கட்டுப்பாட்டின் கீழ் முறைப்படுத்தப்பட்ட முதலாளித்துவ வளர்ச்சியை, அதனை ஆதாரமாகக்கொண்ட தொழில்மயமாக்கத்தை உறுதி செய்ய முடியும். சாதி ஒழிப்புக்கான, பெண் விடுதலைக்கான, பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கான பொருளீய அடித்தளத்தையும் உருவாக்க முடியும்.

“நான் ஒரு கம்யூனிஸ்டாக இல்லை என்ற போதிலும், நமக்கு என்ன தேவை எனில் ருஷ்யாவின் கூட்டுப் பண்ணை அமைப்பு முறைதான்; நமது விவசாய பிரச்சனையைத் தீர்க்க இது ஒன்று மட்டுமே வழி” என்று அம்பேத்கர் சொன்னார். மிகச் சரியானதுதான். ஆனால் இதை நடைமுறை யதார்த்தமாக்கிய சமூக சக்திகளை அவர் (மட்டுமல்ல பெரியாரும்தான்) புரிந்துகொள்ளவில்லை. சோசலிச உணர்வு பெற்ற தொழிலாளர் வர்க்கமும், ஜனநாயக உணர்வு பெற்ற விவசாய சமூகமும், இதர பிரிவினரும்தான் அந்த சமூக சக்திகள். புரட்சிதான் அதற்கான ஒரே வழிமுறையாக இருந்தது. புரட்சி என்பது ஆயுதம் தாங்கிய சில குழுக்களின் நடவடிக்கை அல்ல. வர்க்கப் போராட்டத்தின் உச்சக்கட்டம். வெகுமக்களின் திருவிழா. பகத்சிங் சொன்னது போல இந்த அநீதியான சமூகத்தை மாற்றியமைப்பதுதான். ❑


மாலெ தீப்பொறி

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்)**

**அரசியல் கருத்தியல் ஆயுதம்**

**மாதம் இருமுறை**

**ஆண்டுச் சந்தா ரூ. 200/–**

**தனி இதழ் ரூ.10/–**

# மின்துறையை தனியார்மயமாக்கும் ஒன்றிய பாஜக அரசின் முயற்சியை முறியடிப்போம்

## தனியார் பஞ்சாலைகளை பொதுத்துறை நிறுவனங்களாக மாற்றிய புதுச்சேரி பஞ்சாலைத் தொழிலாளர்களின் போராட்ட வெற்றி மரபை முன்னெடுப்போம்!

பிரெஞ்சு காலனிய காலத்தில் துவக்கப்பட்ட மூன்று தனியார் பஞ்சாலைகளான சுதேசி காட்டன் மில்ஸ்(சவானா ஆலை 1828) ஸ்ரீ பாரதி மில்ஸ்(கேப்ளே ஆலை 1892) ஆங்கிலோ பிரெஞ்ச் டெக்ஸ்டைல்ஸ்(ரோடியர் ஆலை 1898) காலப்போக்கில் தனியார் முதலாளிகளின் சுயநலத்தால் நட்டமாக்கப்பட்டு, நலிவடைந்து ஒன்றன்பின் ஒன்றாகக் கைவிடப்பட்டு மூடப்பட்டன. சுமார் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்த இந்த ஆலைகள் மாநிலப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்தன. ஆலைகள் மூடலுக்கு எதிரான பஞ்சாலைத் தொழிலாளர்களின் விடாப்பிடியான தொடர் போராட்டம், வெகு மக்களுடன் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களின் ஐக்கியபட்ட போராட்டங்கள் ஆட்சியாளர்களை நெருக்கி மூடப்பட்ட ஆலைகளை ஒன்றிய, மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனங்களாக்கின. தேசிய பஞ்சாலைக் கழகம் (தமிழ்நாடு, புதுச்சேரி) துவக்கப்பட்ட 1974 ஆம் ஆண்டிலேயே முதலில் கழகத்துடன் இணைக்கப்பட்டு திறக்கப்பட்ட ஆலை ஸ்ரீ பாரதி மில்ஸ். 1985இல் சுதேசி பஞ்சாலை திறக்கப்பட்டு இணைக்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டு ஆங்கிலோ பிரெஞ்சு புதுச்சேரி அரசின் கீழ் ஒரு பொதுத்துறை நிறுவனமானது. இத்தகைய போராட்ட வெற்றி மரபுதான் புதுச்சேரி பஞ்சாலைத் தொழிலாளர்களின் மரபு.

இந்த மரபை ஒன்றிய பாஜக அரசு நன்கு தெரிந்திருந்தும், புதுச்சேரியின் மின்துறையை தனியாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கும் எனில் அது குளவிக் கூட்டில் கை வைத்ததற்கு ஒப்பானது என நிச்சயமாக தொழிலாளி வர்க்கம் தெளிவுபடுத்தும்.

தற்போதைய மின்துறை 1942இல் பிரெஞ்சு இந்தியா எலக்ட்ரிக் கம்பெனி என்று தனியாரிடமிருந்தது. அதை பின்னர் காலனிய அரசாங்கம் அதன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து ‘ரெழி தெ லெக்திரசித்தே’ என்று அரசுடைமையாக்கியது. 1953இல் பிரெஞ்சு அரசாங்கம் புதுச்சேரி விடுதலையின் போது புதுச்சேரி அரசுக்கு மாற்றி ஒப்படைத்தது. அன்று முதல் மாநில அரசின் மக்கள் சொத்தாக நீடித்து வருகிறது. இதர மாநிலங்கள், ஒன்றிய ஆட்சி பரப்புகளில் மின் உற்பத்தி, கட்டுமானம், மின்விநியோகம் அனைத்தும் அரசு வாரியத்திடம் இருக்கின்றன. ஆனால் புதுச்சேரியில் மின்சாரம் ஒரு நேரடி அரசு துறை.

285 ஏக்கர் நிலம், 5 லட்சம் நுகர்வோர், அவர்களின் ரூ.300/- கோடி வைப்புத் தொகை, 3000 அரசு ஊழியர்கள், மேலும் நூற்றுக்கணக்கான தினக்கூலி, ஒப்பந்த தொழிலாளர்களும் உள்ளனர். 35,000 குடிசை வீடுகளுக்கு கட்டணமில்லா மின்சாரம், 7,100 வேளாண் கட்டணமில்லா மின் இணைப்புகள், ரூபாய் 400 கோடியில் முன் கட்டண மீட்டர்கள், மின் விநியோக உள்கட்டமைப்புகள் கட்டிடங்கள் என சந்தை மதிப்பில் ரூபாய் 2000 கோடிக்கு மேல் சொத்து மதிப்பில் இயங்கும் துறை. புதுச்சேரி 1972ஆம் ஆண்டிலேயே நகரம், கிராமம் என 100% மின்மயப்படுத்தப்பட்ட மாநிலம் ஆகும். மேலும் புதுச்சேரி மாநிலத்தின் நான்கு பிராந்தியங்களிலும் (புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனம்) அரசு தொடர்பான அனைத்து மின் வேலைகளையும் மின்துறையே நேரடியாக செயல்படுத்தி வருகிறது.

கொரோனா நோய் காலத்திற்குப் பின்னர் 2022 மே 12 ஆம் நாள் ஒன்றிய நிதி அமைச்சர் ஆத்ம நிர்பார் பாரத் அபியான்( சுயசார்பு இந்தியா) என்ற திட்டத்தை அறிவித்து, ஒன்றிய ஆட்சி பரப்புகளின் மின்விநியோகத்தை நூறு விழுக்காடு தனியார்மயப்படுத்த வேண்டும் என்ற தடாலடி அறிவிப்பு செய்தார். கொரோனா காலத்திலும் அதற்குப் பின்னரும் புதுச்சேரி மின்துறைக்கு ஏற்பட்ட மின் இழப்பு, நட்டத்தையும் மேற்கோள் காட்டி ஒன்றிய மின் அமைச்சர் மின்துறையை தனியார்மயமாக்க புதுச்சேரி அரசை கட்டாயப்படுத்தி வருகிறார். அவர் பல வகையிலும் மின்னிழப்பு (AT&C) தேசிய சராசரியை விட 2.2% அதிகம் என்கிறார். {தேசிய சராசரி 15.3%} தனியார் துறையில் 8% என்று வாதிட்டு புதுச்சேரியில் மின் நுகர்வு வசூல் 92.59% என்றும் இது அகில இந்திய சராசரியை விட 4.68% குறைவு என்றும் தெரிவிக்கிறார். 2021-2022இல் ரூபாய் 23 கோடியாக இருந்த நட்டம் 2022-2023இல் ரூ.131 கோடியாக உயர்ந்துவிட்டதால் செலவினங்களைக் குறைத்திட தனியார்மயம் அவசியம் என்று போதனை செய்கிறார். ஒன்றிய உள்துறை செயலரோ, மின் துறையின் சந்தை சொத்து மதிப்பை ரூபாய் 2000 கோடியிலிருந்து சுமார் 1000 கோடியாக குறைத்துக் காட்டுகிறார். தேய்மானம் போக வெறும் ரூபாய் 500 கோடிதான் என்று மக்கள் சொத்தை தங்கத் தாம்பாளத் தட்டில் வைத்து தனியாருக்கு தாரை வார்ப்பதில் ஆர்வம் காட்டுகிறார். 2012ஆம்

ஆண்டிலேயே புதுச்சேரி மின்துறையை தனியார்மயப்படுத்தும் ஒன்றிய அரசின் திட்டத்தை புதுச்சேரி அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரித்து ஒன்றிய அரசுக்கு தெரிவித்துள்ளது.

ஒன்றிய நிதி அமைச்சரின் தனியார்மய அறிவிப்பினால் கோபமடைந்த ஊழியர்கள் 2020ஆம் ஆண்டில் ஐந்து நாட்கள் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர். தொழிலாளர்களின் வேலை நிறுத்த அழுத்தத்திற்குப் பணிந்து 31-12-2020, 20-1- 2021 தேதிகளில் மாநில முதல்வர் மீண்டும் ஒன்றிய அரசின் தனியார்மய திட்டத்தைக் கைவிட வலியுறுத்தி கடிதங்கள் எழுதுகிறார். ஒன்றிய அரசு அசைந்து கொடுக்காததால் 2021 ஜனவரி மாதம் மின்துறை ஊழியர்கள் மூன்று நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர். தொழிலாளர்களின் கடும் வேலை நிறுத்தப் போராட்டங்களுக்குப் பின்னாலும் ஒன்றிய பாஜக அரசு தனியார்மயத்தில் முனைப்புக் காட்டி மின்துறை விற்பனைக்கு ஒப்பந்த புள்ளிகள் கோரியபொழுது 2022இல் இரண்டு நாட்கள் வேலைநிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் மீண்டும் தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர். அதே நேரத்தில் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தை அணுகி ஒப்பந்த புள்ளி கோருதலுக்கு எதிராக தொழிலாளர்கள் தடையாணை பெறுகின்றனர்( WP 26692/22 WMP25757/2022) .

போராடும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக இடதுசாரிக் கட்சிகள் சிபிஐ (எம்-எல்), சிபிஐ (எம்), சிபிஐ, திமுக, காங்கிரஸ், விசிக 2022ஆம் ஆண்டிலேயே மின்துறை தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தின. கடுமையான போராட்டங்களுக்குப் பின்னர், மின் துறையில் நூறு விழுக்காடு பங்குகள் தனியார் மயம் இல்லை; 51% பங்குகளே தனியாருக்கு விட உள்ளோம் என்று ஒன்றிய அரசு உள்துறை அமைச்சகம் திசை திருப்பி வருகிறது. இந்தத் திசை திருப்பும் முயற்சிக்கு எதிராக சிபிஐ (எம் எல்) பங்கேற்கும் இந்தியா கூட்டணிக் கட்சிகள், 5-9-2024இல் கடுமையாக உயர்த்தப்பட்ட மின் கட்டண உயர்வுக்கு எதிராகவும், தனியார்மயத்திற்கு எதிராகவும் தலைமைச் செயலகத்தை முற்றுகையிட்டு சுமார் ஆயிரம் பேர் கைதாகினர். மக்களின் கோபத்தை புரிந்து கொண்ட என் ஆர் காங்கிரஸ்-பாஜக கூட்டணி அரசு மின் கட்டண உயர்வில் 200 அலகுகள் வரை மானியம் அறிவித்தது. தனியார்மயப்படுத்துவதை திரும்பப் பெறுவது பற்றி மாநில பாஜக கூட்டணி அரசு கருத்து தெரிவிக்காததால், இந்தியா கூட்டணிக் கட்சிகள் 17.09.2024இல் நடத்திய மாநில அளவிலான கதவடைப்பு, மறியல் போராட்டத்தில் ஆயிரக்கணக்கில் கைதாகி, என் ஆர் காங்கிரஸ்-பாஜக கூட்டணி அரசு, ஒன்றிய அரசு ஆகியவைகளுக்கு புதுச்சேரி மக்கள் எச்சரிக்கை செய்துள்ளனர் . புதுச்சேரியில் பஞ்சாலைத் தொழிலாளர்களின் போராட்ட வெற்றி மரபை பின் தொடர்ந்து, மின் ஊழியர்கள் உழைக்கும் மக்களுடன் இணைந்து உயர்த்திப் பிடிக்கும் தொடர் போராட்டங்கள், ஆட்சியாளர்களுக்கு உறுதியாக அச்சமூட்டத் துவங்கிவிட்டது . ❐

–சோபா–

குழந்தைகள், பெண்கள் மீதான தொடர் பாலியல் வன்முறைகளை தடுத்திடு!

## அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் பட்டினிப் போர்

அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகமும் சங்கர் சமூக நீதி அறக்கட்டளையும் இணைந்து குழந்தைகள் பெண்கள்மீதானதொடர்பாலியல்வன்முறைகளைதடுத்திடக் கோரி ஒருநாள் அடையாள பட்டினிப் போராட்டம் கோவை சிவானந்தா காலனியில் நடைபெற்றது. பெண்கள் கழகத்தின் மாநில அமைப்புக்குழு உறுப்பினர் தோழர் பிலோமினா தலைமை தாங்கினார். சங்கர் சமூகநீதி அறக்கட்டளையின் தோழர் கௌசல்யா முன்னிலை வகித்தார். போராட்டத்தை, தந்தை பெரியார் திராவிட கழகத்தின் பொதுச்செயலாளர் தோழர் கு ராமகிருஷ்ணன் துவக்கி வைத்துப் பேசினார். சிபிஐஎம்எல், கோவை மாவட்டச் செயலாளர் தோழர் பாலசுப்பிரமணியன் போராட்டத்தை வாழ்த்திப் பேசினார். அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் மாநிலக் குழு உறுப்பினர் தோழர் வள்ளிமயில், தோழர் சுஜாதா உள்ளிட்டோர் உரையாற்றினார்கள். சிபிஐஎம்எல் மாநிலக் குழு உறுப்பினர் தோழர்பெரோஸ் பாபு, ஏஐசிசிடியு மாவட்டக் குழு உறுப்பினர் தோழர் வள்ளி, தோழர்கள் மோகன், நாராயணன், சந்தானம் உள்பட பலரும் கலந்து கொண்டனர் . ❐



# லடாக் மக்கள் போராட்டம்



லடாக் மக்களின் கோரிக்கைகள் நாட்டின் பிற பகுதிகளுக்கும் தெரிய வேண்டும் என்பதற்காக லே-யில் இருந்து சோனம் தலைமையில் டெல்லி நோக்கி வந்தனர். ஹரியானா, பஞ்சாப் விவசாயிகளை டெல்லியின் எல்லையிலேயே தடுத்து நிறுத்தியது போல், லடாக் மக்களும் எல்லையில் தடுத்து நிறுத்தப்பட்டு லடாக் பவனில் அடைக்கப்பட்டார்கள். லடாக் பவனில் அடைக்கப்பட்டு இருந்தவர்களை யாரும் சந்திப்பதற்கு அனுமதிக்கவில்லை. புதிய எல்லை கட்டுப்பாடுக் கோடு ஒன்று டெல்லியில் லடாக் பவனில் தங்கியிருந்தவர்களும் அவர்களைச் சந்திக்கச் சென்றவர்களுக்கும் இடையே மோடி-ஷா அரசால் உருவாக்கப்பட்டது. இகக(மாலெ) பொதுச் செயலாளர் திபங்கர், புருசோத்தம் சர்மா, ஜேஎன்யு மாணவர் சங்க முன்னாள் தலைவர் சாய் பாலாஜி மற்றும் கட்சியின் சமூக வலைத் தள ஒருங்கிணைப்பாளர் அருண் ஆகியோர் மக்களைச் சந்திப்பதற்காக லடாக் பவனிற்குச் சென்றார்கள். அவர்களை டெல்லி காவல்துறை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. போராட்ட இயக்கத்தின் தலைவர் சோனம் வாங்சுங் நான்கு நாட்களாக பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். இருப்பினும் அவரை வெளியே வரச் சொல்லிதான் சந்திக்க முடிந்துள்ளது. திரும்பி வரும் வழியில், லடாக்கிற்கு மாநில அந்தஸ்து கோரி நடைபெறும் லே முதல் டெல்லி வரையான நெடும்பயணத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் கார்கில் ஜனநாயக கூட்டணியின் சஜாத் கார்கிலியையும் சந்தித்து ஒருமைப்பாடு தெரிவித்தார்கள்.

லடாக் கடந்த ஐந்து ஆண்டுகளாக யூனியன் பிரதேசமாக உள்ளது. ஆனால் எந்தவொரு புது முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக, அங்கே ஜனநாயகம் இல்லை, மக்களுக்கு கௌரவம் இல்லை. ஆறாவது பட்டியல்படி தனி மாநில அந்தஸ்து வழங்கி மென்மையான சுற்றுச்சூழலை, இமயமலைப் பகுதியை, அங்கு வாழும் பழங்குடி மக்களைப் பாதுகாப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இல்லை. இமயமலையைக் காப்பதற்கான போராட்டக் குரல் லடாக்கில் இருந்து வந்துள்ளது இமயமலை பருவநிலையைக் காப்பதற்கு லடாக்கில் இருந்து உத்ரகாண்ட் வரையும் இமயமலையிலிருந்து சிக்கிம் வரை ஒற்றுமையும் ஒருமைப்பாடும் கொண்ட மிகவும் வலுவான இணைப்பு ஏற்பட்டால் அது மிகவும் வரவேற்கத்தக்கது. கூட்டாட்சி மற்றும் ஜனநாயக அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் நாம் அனைவரும் இமய மலையைக் காக்கப் போராடும் சோனம் வாங்சுங் மற்றும் ஜோத்திமத்தைக் காக்கும் பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ள உத்ராகாண்ட்டின் அதுல் சாதி போன்றவர்களுடைய குரல்களை ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும்.

லேயும் கார்கிலும் முற்றிலும் மாறுபட்ட தன்மைகள் கொண்டவை. ஆனால், லடாக்கின் மாநில அந்தஸ்திற்கான போராட்டத்தில் ஒன்று பட்டு நிற்கின்றன. அரசியலமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதியோடு பருவகால நிலை மற்றும் பாலின நீதியையும் முழுமையாக வென்றெடுக்க, 21ம் நூற்றாண்டில் இந்தியா முன்னேறிச் செல்வதற்கு இந்தியாவின் பன்முகத் தன்மைக்கு உண்மையான மரியாதையையும் இந்தியாவின் பழங்குடி மக்களுக்கு உண்மையான தன்னாட்சி அதிகாரத்தையும் உறுதி செய்யும் கூட்டாட்சிக் கட்டமைப்பு காலத்தின் கட்டாயமாகும்.

# மக்கள் கோரிக்கைப் பிரச்சாரம் மற்றும் போராட்டங்கள்









இகக(மாலெ), அயர்லா, ஏஐசிசிடியு அமைப்புகள் சார்பாக ஒன்றிய மட்டங்களில் தமிழ்நாடு முழுவதும் மக்கள் கோரிக்கைகள் மீது பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு, அரசுத் துறை அதிகாரிகளிடம் மனு கொடுக்கப்பட்டு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இந்த பிரச்சாரம் மற்றும் போராட்டங்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, மத்தியக்குழு உறுப்பினர்கள் பாலசுந்தரம், சந்திரமோகன், ஏஐசிசிடியு தலைவர்கள் சங்கரபாண்டியன், இரணியப்பன், அந்தோணிமுத்து, அயர்லா தலைவர்கள் குணசேகரன், வளத்தான், கண்ணையன் உள்ளிட்ட பல தலைவர்களும் கலந்து கொண்டனர்.

# தோழர் கேண்டீன் மணி நினைவேந்தல்!



தோழர் கேண்டீன் மணி அவர்களுக்கு நினைவேந்தல் நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, பேராசிரியர் அ.மார்க்ஸ், எல்டியுசி மாநிலத் தலைவர் ஏ.எஸ். குமார், சிபிஐஎம்எல் சென்னை மாவட்டச் செயலாளரும் ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் இரணியப்பன் மற்றும் தோழர் கேண்டீன் மணியின் குடும்பத்தினரும் நண்பர்களும் கட்சித் தோழர்களும் கலந்து கொண்டனர்.

## பீகாரை மாற்றுவோம்; நீதி கேட்டு நடைபயணம்!
## கோரிக்கைகள்

1. நிதீஷ் அரசாங்கம் 94 இலட்சம் ஏழை குடும்பங்களுக்கு தலா ரூ. 2 லட்சம் நிதியுதவி என்ற வாக்குறுதியை கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும்.

2. அனைவருக்கும் 5 சென்ட் வீட்டு மனை மற்றும் ஒரு வசதியான வீடு வழங்கப்பட வேண்டும்.

3. தலித்துகள், பெண்கள் மற்றும் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

4. பல தலைமுறைகளாக, பரம்பரையாக நிலத்தில் வாழும் அனைத்து ஏழைக் குடும்பங்களுக்கும் நில பட்டா உரிமைகள் உறுதி செய்யப்படும் வரை நடைபெற்று வரும் நில அளவீட்டுப் பணிகளை நிறுத்தி வைக்க வேண்டும்.

5. ஸ்மார்ட் மீட்டர்களை வலுக்கட்டாயமாக திணிக்கக் கூடாது. மின்சார கட்டணத்தை ஒவ்வொரு யுனிட்டிற்கும் குறைக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிற்கும் குறைந்தபட்சம் 200 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

6. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்களுக்கு உடனடி நிவாரணம், ஒரு ஏக்கருக்கு ரூ. 50,000 பயிர் இழப்பீடு, இதர இழப்புகளுக்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டும். மாநிலத்தில் தொடரும் வெள்ள அபாயத்திற்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும்.

7. பீகாரிலுள்ள 10 லட்சத்துக்கும் அதிகமான திட்டப் பணியாளர்களுக்கு மத்திய அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதிய விகிதத்தில் கௌரவமான ஊதியம் வழங்கப்பட வேண்டும். அனைத்து ஆஷா, அங்கன்வாடி, ஜீவிகா, கிராமப்புற செவிலியர்கள், ஊரக வேலை திட்டம் பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் அனைவரும் தொழிலாளர்களாக அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்கு தொழிலாளர் சட்டங்களின்படியான அனைத்து பயன்களையும் வழங்க வேண்டும்.

8. பீகார் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபடி, உயர்த்தப்பட்ட இடஒதுக்கீட்டின் அளவுகளை உறுதி செய்ய, அரசியலமைப்புச் சட்டம் 9வது அட்டவணையில் அதை இணைக்க வேண்டும்.

9. எவ்வித தாமதமின்றி நாடு முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும்.

10. பீகாருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கக் கொடுத்த வாக்குறுதியை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும்.

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.10.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# பாலஸ்தீன ஆதரவுப் போராட்டங்கள்

**இகக(மாலெ)**
**இகக(மா)**
**இகக**
**தலைவர்கள்**


















Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh